முழுவதுமாகச் சோதனை செய்யும்போது, இந்தப் பணக்காரப் பயலுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றினால் என்னுடைய இந்த சீருடையைக் கழற்றி எறிந்துவிட்டுப் போய்விடுவேன்.

ஜார்ஜ் : எனக்கும் சம்மதம். ஒன்று இவன் சோதனைக்கு உள்ளாக வேண்டும்; இல்லை நாம் வெளியே போக வேண்டும்.

உய்கோ : ஒருகால் எதரரும் என்னைச் சோதனை போடவேண்டும் என்று உத்தரவு கொடுத்தார் என்றால் 5 நிமிஷத்திலே நான் இந்த வீட்டிலிருந்து வெளியேறி விடுவேன்.

ஜார்ஜ் : ஸ்லிக்!

ஸ்லிக் : உம்?

ஜார்ஜ் : ஸார் பேச்சில் பணக்காரத்திமிர் இருக்கிறது பார்த்தாயா?

உய்கோ : ஜெசிகா!

ஜெசிகா : உம்.

உய்கோ : இவர்கள் பேச்சிலே ரௌடித்தனம் இருப்பது உனக்குத் தெரியவில்லை?

ஸ்லிக் : (அவனை நெருங்கித் தோளில் கை வைத்து) ஜாக்கிரதை! தம்பி ரௌடியா இருக்கிறதினாலே ரௌடி வேலையைக் காண்பிக்க வேண்டியிருக்கும்.

(எதரர் வருகிறார்)

### காட்சி — 3

முன்காட்சியில் உள்ளவர்கள், மற்றும் எதரர்

எதரர் : என்னைத் தொந்தரவு செய்யக் காரணம்?

ஸ்லிக் : (ஓர் அடி பின்வாங்குகிறான்) இவன் சோதனைக்குட்பட மறுக்கிறான்.

எதரர் : அப்படியா?



உய்கோ : என்னைச் சோதனைபோட நீங்கள் இவர்களை அனுமதித்தால் நான் வெளியே போகிறேன். அவ்வளவுதான்.

எதரர் : ஓஹோ?

ஜார்ஜ் : அனுமதிக்க மறுத்தால் நாங்கள் வெளியே போகிறோம்.

எதரர் : எல்லோரும் உட்காருங்கள். (வேண்டா வெறுப்புடன் உட்காருகிறார்கள்) ம், உய்கோ, என்னை நீ என்று ஒருமையில் கூப்பிடலாம். இங்கே எல்லோரும் அப்படித்தான் ஒருவரை ஒருவர் அழைப்பது வழக்கம்.

எதரர் : உன் பெயர் என்ன?

ஜெசிகா : பெண்களையும்கூட நீ என்று ஒருமையில்தான் கூப்பிடும் வழக்கமா?

எதரர் : ஆமாம்.

ஜெசிகா : நான் அதற்கும் என்னைப் பழக்கிக்கொள்கிறேன், என் பெயர் ஜெசிகா.

எதரர் : (அவளையே பார்த்துக்கொண்டு) நீ பார்க்க விகாரமாய் இருப்பாய் என்று நினைத்தேன்.

ஜெசிகா : நான் என்ன செய்வது! மன்னிக்க வேண்டும்.

எதரர் : (அவளைப் பார்த்துக்கொண்டே) ஆமாம், வருத்தப்பட வேண்டிய விஷயம்தான்.

ஜெசிகா : நான் வேண்டுமானால் தலையை மொட்டை அடித்துக் கொள்ளட்டுமா?

எதரர் : (அவளிடமிருந்து கண்களை அகற்றாமல்) வேண்டாம். (அவளிடமிருந்து சற்று விலகிச் சென்று) உன்னால்தான் இவர்களிடையே கைகலப்பு ஏற்படும் நிலை வந்துவிட்டதா?

ஜெசிகா : அந்த அளவுக்கு இன்னும் வரவில்லை.

எதரர் : என்றும் வராமலேயே இருக்கட்டும். (நாற்காலியில் அமர்ந்து கொள்கிறார்) சோதனை முக்கியமில்லை.

ஸ்லிக் : நாங்கள்...



எதரர் : சோதனை கொஞ்சம்கூட முக்கியமில்லை. அதைப் பற்றிப் பிறகு பேசுவோம். (ஸ்லிக்கிடம்) என்ன நடந்தது? அவனிடம் எதை வெறுக்கிறீர்கள்? மிக நன்றாக உடை அணிந்து கொண்டு இருப்பதையா? புத்தகத்தில் இருப்பதுபோல் வசனம் பேசுவதையா?

ஸ்லிக் : இவன் பிறந்த வர்க்கமே வேறு.

எதரர் : அதுபற்றி இங்கே பேசவேண்டாம். பிறப்புப் பற்றிய விஷயங்கள் உள்ளே நுழையும்முன் வாசலிலேயே அகற்றிவைத்துவிட வேண்டியவை. (அவர்களைப் பார்த்து) தம்பிகளா, நீங்கள் ஆரம்பித்ததே சரியில்லை. (உய்கோவிடம்) நீ விறைப்பாக நடந்துகொண்டிருக்கிறாய். காரணம், நீதான் மிகவும் வலிமையில் குறைந்தவன். (ஸ்லிக்கிடமும், ஜார்ஜிடமும்) உங்களுக்கு இன்று என்னவோ சரியில்லை. பேச்சுத் தடிப்பாயிருந்திருக்கிறது. அவனை ஆரம்பத்திலிருந்தே தவறான கோணத்தில் பார்க்கிறீர்கள். நாளைக்கு அவனிடம் ஏதேனும் வம்பு வளர்ப்பீர்கள். அடுத்த வாரம் நான் அவனை சுருக்கெழுத்தில் குறிப்பெடுத்துக் கொள்ளக் கூப்பிட்டு அனுப்பும் போது, குளத்திலேயிருந்து அவன் பிணம் கண்டெடுக்கப் பட்டதாக வந்து சொல்வீர்கள்.

உய்கோ : அதாவது என்னைக் காப்பாற்றிக்கொள்ள என்னால் முடியா விட்டால்.

எதரர் : உன்னால் எதையும் தவிர்க்கமுடியாது. சும்மா அலட்டிக் கொள்ளாதே, தம்பி. விஷயம் அந்த அளவுக்கு முற்றக் கூடாது. அதுதான் முக்கியம். நான்குபேர் ஒன்றாக வாழ்வதென்றால், ஒன்று, ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும்; அல்லது, கொன்று தீர்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிப்பதுதான் எனக்கு மகிழ்ச்சி.

ஜார்ஜ் : (கம்பீரமாக) உத்தரவு போட்டு உணர்ச்சிகளை உருவாக்க முடியாது.

எதரர் : (திடமாக) முடியும். ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் கட்சிப்



பணி ஆற்றிக்கொண்டிருக்கும்போது, உத்தரவு போட்டு உருவாக்க முடியும்.

ஜார்ஜ் : ஆனால் இங்கு எல்லோரும் ஒரே கட்சி இல்லையே.

எதரர் : (உய்கோவிடம்) நீ எங்கள் கட்சியைச் சேர்ந்தவனில்லை?

உய்கோ : சேர்ந்தவன்தான்.

எதரர் : பிறகு?

ஸ்லிக் : ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் ஒரே காரணத்துக்காகக் கட்சியில் சேர்ந்தவர்கள் இல்லை.

எதரர் : எல்லோரும் ஒரே குறிக்கோளில்தான் கட்சியில் சேருவது.

ஸ்லிக் : மன்னிக்கவேண்டும். அவன் ஏழைகளுக்குத் தன்மானம் கற்றுக்கொடுப்பதற்காகச் சேர்ந்திருக்கிறான்.

எதரர் : ஓஹோ?

ஜார்ஜ் : அப்படித்தான் அவன் சொன்னான்.

உய்கோ : நீங்கள் வயிற்றுப்பசிதீரச் சாப்பிடுவதற்காகத்தான் கட்சியில் சேர்ந்தீர்கள், அப்படித்தானே நீங்கள் சொன்னீர்கள்?

எதரர் : பார்த்தீர்களா! நீங்கள் எல்லாரும் சொல்வது ஒன்றுதான்.

ஸ்லிக் : எப்படி?

எதரர் : ஸ்லிக், "பசிக்கிறது என்று சொல்ல வெட்கப்படுகிறேன்" என்று நீயே என்னிடம் சொல்லவில்லையா? (ஸ்லிக்கை நோக்கிப் பதிலை எதிர்பார்க்கிறான். அது வரவில்லை) வேறு எதைப் பற்றியும் நினைக்கமுடியாமல் பசி உன்னைச் செயலிழக்கச் செய்வதுதான் உனக்கு வெறியூட்டுகிறது என்று சொல்லி இருக்கிறாயே. இருபது வயது இளைஞன் ஒருவனின் சிந்தனை சதாகாலமும் தன் வயிற்றை நிரப்புவது பற்றியே இல்லாமல் அதனிலும் உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்று நீ சொல்லியிருக்கிறாயல்லவா?

ஸ்லிக் : இவன் எதிரே அதையெல்லாம் இப்போது சொல்லத்தான் வேண்டுமா?

எதரர் : நீ சொன்னாயா இல்லையா என்பதுதான் கேள்வி.

ஸ்லிக் : அதைக்கொண்டு என்ன நிரூபிக்கப் போகிறாய்?

எதரர் : இதனால் உனக்கு வயிற்றுக்குச் சோறு வேண்டும். அதைத் தவிர வேறு ஏதோ ஒன்றும் தேவை என்று ஆகிறது. அவன் அதைத் தன்மானம் என்று சொல்கிறான். சொல்லிவிட்டுப் போகட்டுமே. அவரவர் தமக்குப் பிடித்த வார்த்தையை உபயோகிக்கட்டுமே!

ஸ்லிக் : அதற்குப் பெயர் தன்மானம் இல்லை. அதைத் தன்மானம் என்று சொல்வது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. அவன் சிந்தனை செய்து வார்த்தையை உபயோகிக்கிறான். எல்லாவற்றைப் பற்றியும் அறிவு பூர்வமாகச் சிந்திக்கிறான்.

உய்கோ : வேறு எப்படிச் சிந்திக்கவேண்டும் என்கிறாய்?

ஸ்லிக் : வயிறு காயும்போது யாரும் அறிவுபூர்வமாக யோசிப்ப தில்லை. பசி அடங்கவேண்டும் என்று நான் விரும்பியது உண்மைதான். சற்றுநேரமாகிலும் அடங்கினால்தான் வேறு ஏதாவது விஷயத்திலே கவனம் செலுத்த முடியும்; உனக்குப் பசியென்றால் என்னவென்றே தெரியாது. எங்களிடம் வந்து எங்களுக்கு உபதேசம்பண்ண வந்துவிட்டாய்.

உய்கோ : தவறு.

ஜார்ஜ் : பசி என்றால் உனக்கு என்னவென்று தெரியுமா? சாப்பிடு முன் பசி ஏற்படுவதற்காக உடற்பயிற்சி செய்ய வேண்டிய அவசியம்தான் உனக்கு இருந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

உய்கோ : இது ஒன்றுதான் நீ சரியாகச் சொல்லியிருக்கிறாய், என் அருமைத் தோழனே! ஆமாம், பசி என்றால் என்னவென்று எனக்குத் தெரியாதுதான். சின்ன வயதில் எனக்குத் தரப்படும் உயர்ந்தரக உணவுக் கலவையை நீ பார்த்ததில்லை. அதிலும் பாதிக்குமேல் சாப்பிடமாட்டேன். எவ்வளவு வீணாகும் தெரியுமா? அப்போது என் வாயைத் திறக்கவைத்து, அப்பாவுக்கு ஒரு பிடி, அம்மாவுக்கு ஒரு பிடி, அத்தைக்கு ஒரு பிடி என்று ஊட்டி விடுவார்கள். ஸ்பூனைத் தொண்டை



உள் வரைக்கும் திணிப்பார்கள். இத்தகைய சூழ்நிலையில்தான் நான் வளர்ந்தேன். தெரிந்துகொள். எல்லாவற்றையும்விட மிக ஆடம்பர உணவு என்னவென்றால், தெருவில் மற்றவர்கள் எல்லோரும் ஒரு இறைச்சித் துண்டுக்காகத் தங்களையே விற்கத் தயாராக இருக்கும்போது, எனக்குப் பசி எடுக்க வேண்டும் என்பதற்காக மருந்து கொடுப்பார். "வயிற்றுக்குச் சோறு வேண்டும்" என்கிற போஸ்டரை எடுத்துக்கொண்டு பலர் தெருவில் ஊர்வலம் போவதை ஜன்னல் வழியாகப் பார்ப்பேன். சாப்பிட உட்காருவேன். "சாப்பிடு, உய்கோ! சாப்பிடு. வேலைதேடி அலையும் காவல்காரனுக்காக ஒரு பிடி, குப்பைத் தொட்டியிலே எறியப்படும் கறிகாய்த்தோலிகளைப் பொறுக்கும் கிழவிக்காக ஒரு பிடி, தன் காலை உடைத்துக் கொண்டு தொழிலிழந்து நிற்கும் தச்சன் குடும்பத்துக்காக ஒரு பிடி" என்பார். இந் நிலையில்தான் நான் வீட்டை விட்டு வெளியேறிக் கட்சியிலே சேர்ந்தேன். ஆனால் நீ சொன்ன இதே பாட்டைத்தான் திரும்பத்திரும்பக் கேட்கிறேன்: "உனக்குப் பசி என்றால் என்னவென்று தெரியாது. உய்கோ! நீ ஏன் இதிலே தலையிடுகிறாய்? உனக்கு என்ன புரியும்? உனக்குத்தான் பசியென்றால் என்னவென்றே தெரியாதே!" ஆமாம். உண்மை தான், எனக்குப் பசித்ததே இல்லைதான். ஆனால் இந்த ஒன்றைச் சொல்லியே நீங்கள் எல்லோரும் என்னைக் குறைசொல்வதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றால், நான் என்னதான் செய்யவேண்டும் என்று சொல்லுங்கள்.

(சிறிது நேரம் மௌனம்)

எதரர் : கேட்டீர்களா? சொல்லுங்களேன், அவன் என்னதான் செய்ய வேண்டுமென்று. ஸ்லிக், அவனை என்ன செய்யச் சொல்லலாம்? ஒரு கையை வெட்டிக்கொள்ளச் சொல்கிறாயா? ஒரு கண்ணைப் பிடுங்கிக்கொள்ளச் சொல்லலாமா? உன் மன்னிப்பைப் பெற அவன் என்னதான் விலை கொடுக்க வேண்டும் என்கிறாய்?

ஸ்லிக் : என்னிடம் மன்னிப்புக் கோரும்படியாக அவன் ஒன்றும் குற்றம் செய்துவிடவில்லை.



எதரர் : ஏன் இல்லை? ஏழ்மையால் தள்ளப்படாமல் கட்சியில் சேர்ந்தது?

ஜார்ஜ் : அது அவன் குற்றம் என்று சொல்லவில்லை. ஆனால் எங்களுக்கிடையே மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. அவன் ஒரு கத்துக்குட்டி. கட்சியில் சேர்ந்தால் நல்லது. செயல் ஆற்றலாம் என்பதற்காகச் சேர்ந்திருக்கிறான். நாங்கள் சேர்ந்தது தவிர்க்க முடியாதது ; நியதி.

எதரர் : அவன் மட்டும் தவிர்த்து இருக்கமுடியும் என்று நினைக்கிறாயா? மற்றவர்களுடைய பசியைப் பார்த்துச் சகித்துக்கொள்வதும் அப்படி ஒன்றும் சுலபமில்லை.

ஜார்ஜ் : சுலபமாகச் சகித்துக்கொள்வோர் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

எதரர் : அப்படிப்பட்டவர்களுக்கு உணர்ந்து பார்க்கும் உள்ளம் இல்லை என்று பொருள். ஆனால் இவனிடம் அது அளவுக்கு அதிகமாகவே இருக்கிறது என்பதுதான் இவன் துரதிருஷ்டம்.

ஸ்லிக் : சரி, இவனுக்குத் தீங்கேதும் நினைக்கப்போவதில்லை. ஆனால் இவனைப் போற்றப்போவதும் இல்லை. அவ்வளவுதான். இருப்பினும் எங்களுடைய உரிமை...

எதரர் : உரிமை என்ன உரிமை? உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. "இவனைப் போற்றப்போவதுமில்லை" என்றா சொல்கிறீர்கள்? பொறுக்கிப்பசங்களா! உங்கள் முகரக் கட்டையைக் கண்ணாடியில் போய்ப் பார்த்துவிட்டு வந்து பிறகு தைரியம் இருந்தால் உணர்ச்சியின் நுட்பங்கள் பற்றிப் பேசுங்கள். இப்போதெல்லாம் உங்கள் வேலையில் மிகுந்த அக்கறையின்மை தெரிகிறது.

உய்கோ : (உரத்த குரலில்) வேண்டாம். எனக்குப் பரிந்து கொண்டு பேசாதீர்கள். உங்களை யார் எனக்குப் பரிந்து கொண்டு வரச்சொன்னார்? இது எனக்குப் பழகிவிட்டது. சற்று முன்பு அவர்கள் நுழையும்போது, பார்த்ததுமே அவர்கள் புன்சிரிப்பின் பொருளைப் புரிந்து கொண்டுவிட்டேன். பசிக்குச் சாப்பிட்ட என் தாத்தா, என் அப்பா, மற்றும் என்



குடும்பத்தினர் எல்லோருக்காகவும் என்னைத் தண்டிக்க விரும்புகிறார்கள். நான்தான் சொல்கிறேனே —இவர்களைப் பற்றி எனக்குத் தெரியும். ஒருகாலும் இவர்கள் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதே நமுட்டுச்சிரிப்புடன் என்னைப் பார்க்கின்றவர்கள் லட்சம் பேர் இருக்கிறார்கள். நான் போராடினேன்; என்னையே அவமானத்திற்கும் ஆளாக்கிக் கொண்டேன். இவர்கள் பழையனவற்றை மறக்கவேண்டும் என்பதற்காக என்னால் இயன்றதையெல்லாம் செய்தேன். நான் அவர்கள்மேல் அன்பு கொண்டவன் என்றும், அவர்கள் நிலையில் என்னை வைத்துக் கொள்வதில் பெருமைப் படுகிறேன் என்றும் சொன்னேன். எதுவும் பலனளிக்க வில்லை. எல்லாமே வீண்தான். இவர்கள் பார்வையில் நான் ஒரு பணக்காரவீட்டுப் பிள்ளை; அறிவு ஜீவி; தன் கைகளால் உழைக்காத ஆள். அவர்கள் சொன்னது ஒன்று உண்மை: இது பிறப்பின்வழி வந்த விஷயம்.

(ஸ்லிக், ஜார்ஜ் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள்)

எதரர் : (தன் மெய்க்காப்பாளர்களைப் பார்த்து) அப்புறம் என்ன?

(ஸ்லிக், ஜார்ஜ் இருவரும் மேலே என்ன செய்வதென்று தீர்மானிக்க இயலாத நிலையில், தோளைக் குலுக்கிக் கொள்கிறார்கள்)

ஸ்லிக் : (தீர்மானத்துக்கு வந்தவனாய், உய்கோவிடம்) நல்லது. இதோ பார் தம்பி, என்னதான் முயன்றாலும் நம்மிடையே ஏதோ ஒன்று ஒட்டமாட்டேன் என்கிறது. ஆனால் நீ கெட்டவன் என்று நான் சொல்லவில்லை. மேலும் நம் முதல் சந்திப்பே சரியாகத் தொடங்கவில்லை என்பதும் உண்மைதான். பரஸ்பரம் நம் வாழ்க்கையை ஒருவருக்கொருவர் நரகமாக்கிக் கொள்ளாமல் இருக்க முயலுவோம் என்ன, சரிதானே?

உய்கோ : (அரை மனத்துடன்) உன் விருப்பப்படி ஆகட்டும்.

ஸ்லிக் : சரிதானா, ஜார்ஜ்?

ஜார்ஜ் : அப்படியே நடந்துகொள்வோம்.

(சற்று நேரம் கழித்து)

எதரர் : (நிதானமாக) – சோதனை பற்றிய பிரச்சினைதான் பாக்கி.

ஸ்லிக் : ஆமாம், சோதனை, நாம்தாம் இப்போது...

ஜார்ஜ் : சோதனைக்கு உட்பட மறுப்பதைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னோமே தவிர.........

ஸ்லிக் : சொல்லத் தவறிவிட்டது என்று இருக்கக்கூடாது அல்லவா?

எதரர் : (குரலை மாற்றிக்கொண்டு) உங்கள் கருத்தை யார் கேட்டார்கள்? (உய்கோவிடம், சாதாரண குரலில்) உன்மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது, தம்பி. ஆனால் நீ யதார்த்த நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். இன்று நான் உன் ஒருவனுக்கு விதிவிலக்கு அளித்தேன் என்று சொன்னால், நாளையே வேறு இருவருக்கு விதி விலக்கு அளிக்கும்படி கேட்பார்கள். இப்படியே போனால் கடைசியில் ஒருவன் வந்து நம் எல்லோரையும் கொன்று விட்டுப் போய்விடுவான். இப்போதுதான் நண்பர்கள் ஆகிவிட்டதினாலே அவர்கள் உன்னை மரியாதையுடன் கேட்டுக்கொள்கிறார்கள் என்று வைத்துக்கொள். அப்போது சோதனைக்கு ஒத்துக் கொள்வாயா?

உய்கோ : ம்... வந்து... மாட்டேன்...

எதரர் : ஓஹோ! (அவனை உற்றுப் பார்த்து) சரி, நானே உன்னைக் கேட்டுக்கொண்டால்? (சிறிது நேரம் கழித்து) எனக்குப் புரிகிறது. உனக்குச் சில கொள்கைகள் இருக்கின்றன. நானும் இதை ஒரு கொள்கைப் பிரச்சினையாக மாற்ற முடியும். ஆனால் என்னைப் பொறுத்தவரை கொள்கைகள் என்பவை... (சற்று நேரம் கழித்து) இதோ என்னைப் பார்த்துச் சொல்... உன்னிடம் ஆயுதம் எதுவும் இல்லையா?

உய்கோ : இல்லை.

எதரர் : உன் மனைவியிடம்?

உய்கோ : இல்லை.



எதரர் : மிகவும் சரி, நான் உன்னை நம்புகிறேன். நீங்கள் இருவரும் போகலாம்.

ழெசிகா : கொஞ்சம் இருங்கள் (அவர்கள் திரும்புகிறார்கள்) உய்கோ, ஒரு நம்பிக்கையைப் பிரதிநம்பிக்கையால் வரவேற்பதுதான் சரி.

உய்கோ : அப்படியென்றால்?

ழெசிகா : நீங்கள் எல்லா இடத்திலும் சோதனை போடலாம்.

உய்கோ : ஆனால்... ழெசிகா!...

ழெசிகா : என்ன ஆனால்?... நீங்கள் ஏதோ கைத்துப்பாக்கியை மறைத்து வைத்துக் கொண்டிருப்பதாக அவர்கள் நினைத்துக் கொள்ளப் போகிறார்கள்.

உய்கோ : பைத்தியகாரி!

ழெசிகா : பின் என்ன? அவர்களை சோதனைபோட விடுங்கள். உங்கள் தன்மானத்திற்கு ஓர் இழுக்கும் இல்லை. காரணம் நாமேதாம், அவர்களைச் சோதனைபோடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

(ஜார்ஜ், ஸ்லிக் இருவரும் நிலைப்படியில் தயக்கத்துடன் நிற்கிறார்கள்)

எதரர் : அப்புறம் என்ன? எதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறீர்கள்? உங்களுக்குப் புரிகிறதல்லவா?

ஸ்லிக் : நான் நினைத்தேன்...

எதரர் : நினைப்பதற்கு ஒன்றுமில்லை... சொல்கிறபடி செய்யுங்கள்.

ஸ்லிக் : சரி சரி... சரி.

(அவர்கள் மேலேழுந்தவாரியாகச் சோதனைபோட ஆரம்பித்ததும், உய்கோ ழெசிகாவைப் பீதியோடு பார்த்துக்கொண்டிருக்கிறான்)

எதரர் : (ஸ்லிக்கிடமும், ஜார்ஜிடமும்)–இதிலிருந்து மனிதர்கள் மேல் நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்ளுங்கள். நான் எப்போதும் நம்பிக்கை வைப்பவன் – எல்லோர்மேலும் நம்பிக்கை வைப்பவன். (அவர்கள் சோதனை போடுகிறார்கள்) என்ன சோதனை



மேலேழுந்தவாரியாக இருக்கிறது? அவர்கள் தீவிரமாகச் சொன்னதாலே, உங்கள் சோதனையும் தீவிரமாகவே இருக்கவேண்டும். ஸ்லிக், அலமாரியின் கீழேபார். சரி, சூட்டுகோட்டை வெளியே எடுத்துத் தடவிப்பார்.

ஸ்லிக் : அது முன்பே செய்தாகிவிட்டது.

எதரர் : மீண்டும் ஒருதரம் செய் – மெத்தைக்குக்கீழேயும் பார்... சரி... ஸ்லிக் தொடர்ந்து நடக்கட்டும். ஜார்ஜ், நீ இங்கே வா. (உய்கோவைக் காண்பித்து) இவன் மேல் சோதனைபோடு. கோட்டுப் பையைத் தடவிப்பார் அப்படித்தான். பிறகு பேண்ட்பைகள். சரி. பின்புறம் துப்பாக்கி வைக்கும் பை... அவ்வளவுதான்.

ழெசிகா : என்னைச் சோதிக்கப்போவதில்லையா?

எதரர் : நீயே கேட்டுக்கொள்வதனால்... ஜார்ஜ், (ஜார்ஜ் அசைய வில்லை) என்ன ஆச்சு? இவளைப் பார்த்தால் பயமாக இருக்கிறதா?

ஜார்ஜ் : வந்து... அதெல்லாம் ஒன்றுமில்லை.

(ழெசிகாவிடம் செல்கிறான்... முகம் சிவக்கிறது. விரல் நுனிகளினால் அவளைத் தீண்டுகிறான். ழெசிகா சிரிக்கிறாள்)

ழெசிகா : பெரிய சீமாட்டிகளின் தாதியர் விரலைப் போன்று நளினமான விரல்கள் இவருடையவை!

(ஸ்லிக் முன்பு துப்பாக்கி வைக்கபட்டிருந்த பெட்டியிடம் வருகிறான்.)

ஸ்லிக் : பெட்டிகள் காலியா?

உய்கோ : (இறுக்கமான நிலையில்) ஆம்.

(எதரர் அவனைக் கூர்ந்து கவனிக்கிறான்)

எதரர் : இதுவுமா?

உய்கோ : ஆமாம்.



ஸ்லிக் : (ஸ்லிக் அதைத் தூக்குகிறான்). இதனுள் ஏதோ இருக்கிறது.

உய்கோ : ஆ... அது காலியில்லை–நீங்கள் வரும்போது அதைத்தான் காலிசெய்ய ஆரம்பித்தேன்.

எதரர் : அதைத் திற.

ஸ்லிக் : (திறந்து உள்ளே தேடியபின்) ஒன்றுமில்லை.

எதரர் : சரி அவ்வளவுதான், நீங்கள் விலகிக்கொள்ளலாம்.

ஸ்லிக் : (உய்கோவிடம்) எதுவும் மனத்தாங்கல் வேண்டாம்.

உய்கோ : ஒன்றும் இல்லை.

ழெசிகா : (அவர்கள் வெளியேறும்போது) நீங்கள் வெளித்தாழ் வாரத்தில் இருக்கும்போது நான் உங்களை வந்து பிறகு சந்திக்கிறேன்.

## காட்சி –4

ழெசிகா, எதரர், உய்கோ.

எதரர் : உன் நிலையில் நான் இருந்தால் அவர்களைப் போய் அடிக்கடி பார்க்கமாட்டேன்.

ழெசிகா : ஏன் அப்படி? இவர்கள் எத்தனை வெகுளியாக இருக்கிறார்கள், அதிலும் ஜார்ஜ் ஓர் இளம் பெண்ணே தான்!

எதரர் : உம்... (அவளை நோக்கிச் செல்கிறான்) நீ அழகாயிருக்கிறாய், உண்மைதான். அதைப்பற்றி வருத்தப்–படுவதில் பயனில்லை. ஆனால் தற்போது இருக்கின்ற நிலையில் இரண்டு வழிகளே எனக்குத் தோன்றுகின்றன. ஒன்று, உனக்குப் போதுமான அளவு தாராளமனம் இருந்தால் எங்கள் எல்லோரையும் மகிழ்விக்கலாம்.

ழெசிகா : என் மனம் மிகவும் குறுகியது.

எதரர் : நினைத்தேன்... எப்படியும் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளும் நிலையைத் தாங்களாகவே உருவாக்கிக் கொள்ளத்தான் போகிறார்கள். இரண்டாவது வழி என்ன

வென்றால், உன் கணவன் வெளியில் சென்றபின், உள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டுவிடு. யாருக்கும் திறக்காதே, எனக்கும் கூடத்தான்,

(அவன் திரும்பி அறையின் நடுவரைக்கும் மெதுவாக நடந்து செல்கிறான். பிறகு நிற்கிறான். காட்சி முழுவதும் அவன் கண்கள் நிலைகொள்ளாமல் அறைமுழுவதும் அங்குமிங்குமாக எதையோ தேடி அலைகின்றன, இடையிடையே அவன் பார்வை உய்கோவின்மேல் நிலைத்து அவனை எடைபோடுகிறது.)

எதரர் : சரி அவ்வளவுதான். (மௌனம்) உய்கோ, நாளை காலை பத்து மணிக்கு என்னை வந்துபார்.

உய்கோ : சரி.

எதரர் : (நிதானமாக ஆனால் அதே சமயம் அவன்கண்கள் இடை விடாது எதையோ தேடிக்கொண்டே இருக்கும் நிலையில்) சரி... சரி... அவ்வளவுதான். வேறென்ன?... நல்லவிதமாக முடிவது எல்லாம் நல்லதுதான், ம்,,, — வேறு என்ன! எல்லோரும் சமரசமாகி விட்டோம். (திடீரென்று) களைப்பாக இருக்கிறதா, தம்பி?

உய்கோ : அதெல்லாம் ஒன்றுமில்லை,

(எதரர் அவனைக் கூர்ந்து கவனிக்கிறான்) — உய்கோ சங்கடத்திற்கு ஆளாகித் தட்டுத்தடுமாறிச் சொல்கிறான்... "வந்து... சற்று முன்பாக நடந்த விஷயத்திற்காக என்னை... மன்னித்துவிடுங்கள்",

எதரர் : (அவன்மேலிருந்து பார்வையை அகற்றாமலே) நான் அதைப் பற்றி நினைக்கக்கூட இல்லை.

உய்கோ : இனிமேல் நீங்கள். . .

எதரர் : நீ என்று கூப்பிடு என்று சொன்னேனே. . .

உய்கோ : இனிமேல் நீ குறை சொல்லும்படியாக நடந்துகொள்ள மாட்டேன், கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடந்து கொள்வேன்,

எதரர் : இந்தக் கதையைத்தான் முன்பே சொல்லிவிட்டாயே. நிச்சயமாக உன் உடம்புக்கு ஒன்றுமில்லை அல்லவா?



(உய்கோ மௌனமாக இருக்கிறான்) உன் உடல்நிலை சரியில்லை என்றால், இப்போதும்கூட என்னிடம் சொல்லி விடலாம், உனக்குப் பதில் வேறு யாரையாவது அனுப்பி வைக்கும்படி நான் கமிட்டியைக் கேட்டுக் கொள்வேன்.

உய்கோ : என் உடம்புக்கு ஒன்றுமில்லை,

எதரர் : சரி, நான் சென்று வருகிறேன்,

எதரர் : (மேசையை விட்டு விலகிக் கட்டிலின் முன் வந்து நிற்கிறான்), இரவு உடை அழகாக அணிந்து கொள்கிறாய். உன் அப்பாவை விட்டுப் பிரிந்து வந்தபோது கொண்டுவந்ததா?

உய்கோ : ஆமாம்.

எதரர் : நீ துடித்துக்கொண்டிருப்பாயே எல்லா அறிவுஜீவிகளும் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருப்பார்கள்.

உய்கோ : பத்திரிகைப் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

எதரர் : அப்படித்தான் என்னிடம் சொன்னார்கள், எவ்வளவோ ஆபத்துக்கள், பொறுப்புகள். ஒருவகையில் பார்த்தால் அதையே நேரடி நடவடிக்கை என்றுகூடச் சொல்லலாம். (மௌனம்) நீ ஏன் அதை விட்டாய்? எதற்காக?

உய்கோ : கட்டுப்பாடுதான்.

எதரர் : எப்போதும் கட்டுப்பாடு கட்டுப்பாடு என்றே சொல்லிக் கொண்டிருக்காதே, இதையே சொல்லிக் கொண்டிருப் பவர்களை நான் நம்புவதில்லை.

உய்கோ : எனக்குக் கட்டுப்பாடு தேவை.

எதரர் : எதற்காக?

உய்கோ : (சலிப்புடன்) என் தலையில் எவ்வளவோ சிந்தனைகள் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் விரட்ட வேண்டும்.



எதரர் : (கடுமையான குரலில் வேகமாக) அவர்கள் இந்தப் பெட்டியைச் சோதனைபோட்டபோது உன்னிடம் பயம் காணப்பட்டது ஏன்?

உய்கோ : நான் பயப்படவில்லை.

எதரர் : ஊகும். நீ பயப்பட்டாய். இதனுள் என்ன இருக்கிறது?

உய்கோ : அவர்கள்தாம் தேடிப்பார்த்தார்களே! ஒன்றுமில்லையே!

எதரர் : ஒன்றுமில்லையா? அதையும் பார்த்துவிடுவோம் (சென்று பெட்டியைத் திறக்கிறான்) அவர்கள் ஆயுதத்தைத் தேடினார்கள், ஒரு பெட்டியில் ஆயுதத்தை மறைத்து வைக்கலாம் ; அது மட்டுமன்றிக் காகிதங்களையும்கூட மறைத்து வைக்கலாம்.

உய்கோ : அல்லது அந்தரங்கமான சொந்த விஷயங்களாகவும் இருக்கலாம்,

எதரர் : எப்போது நீ என்னுடைய கட்டளைக்குள் என்று வந்து விட்டாயோ, அந்த நிமிடத்திலிருந்து உனக்கென்று தனியாக ஒன்றுமில்லை என்பதை நன்றாக உன் நினைவில் நிறுத்திக் கொள். (தேடுகிறான்) சட்டைகள்— ஆடைகள் — எல்லாம் புத்தம்புதியவை. உன்னிடம் பணம் இருக்கிறதா?

உய்கோ : என் மனைவியிடம் இருக்கிறது.

எதரர் : இவை என்ன போட்டோக்கள்? (அவற்றை எடுத்துப் பார்க்கிறான், மௌனம்) ஓ... இதுதானா? புரிகிறது. (ஒரு போட்டோவைப் பார்த்து) வெல்வெட்டினால் ஆன கோட்டு, சூட்டு (வேறு ஒரு போட்டோவைப் பார்த்து) மாலுமி உடைபோன்ற பெரிய கழுத்துப்பட்டி, தொப்பி — ஒரு சின்ன சீமானேதான்!

உய்கோ : அந்தப் படங்களைக் கொடு,

எதரர் : ஸ் (அவனைத் தள்ளி) இவைதான் அந்தரங்கமான சொந்த விஷயங்கள், இவை அவர்கள்கையில் கிடைத்துவிடுமோ என்று நீ பயந்திருக்கிறாய்.

உய்கோ : அவர்கள்மட்டும் தங்கள் அழுக்குக் கையை இவற்றின் மேல் வைத்திருந்தால், இதைப் பார்த்து கேலிச் சிரிப்பு



சிரித்திருந்தார்களேயானால், நான்...

எதரர் : அப்பாடா! மர்மம் விளங்கிவிட்டது! திருட்டுமுழி என்று சொல்வது இதைத்தான். குறைந்த பட்சம் ஒரு வெடி குண்டையாவது நீ ஒளித்து வைத்திருக்கிறாய் என்று நான் சத்தியம் பண்ணியிருப்பேன். (படங்களைப் பார்த்துவிட்டு) — நீ கொஞ்சம்கூட மாறவில்லை. அதே நோஞ்சான் கால்கள்! சந்தேகமில்லை, நீ என்றுமே பசி அறியாதவன்தான். ஆனால் உன் முகத்தில் ஒரு சந்தோஷம் இல்லை, சரிதான், எப்போதும் ஒரு பணக்கார வீட்டுப்பிள்ளையாகவே இருப்பது மனநிறைவு தரக்கூடியது இல்லைதான், வாழ்க்கைக்கு அதுவே ஒருதவறான ஆரம்பம். குழிதோண்டிப் புதைக்க வேண்டும் என்று நீ நினைக்கிற கடந்த காலத்தை ஏன் உன் பெட்டியிலேயே சுமந்துகொண்டு அலைந்து கொண்டிருக்கிறாய்? (உய்கோவின் இனம் கண்டு கொள்ள முடியாததொரு அசைவு.) ஆக நீ உன்னைப் பற்றியே அதிகம் கவலைப் படுகிறாய்,

உய்கோ : நான் கட்சியில் சேர்ந்தது என்னை மறக்கத்தான்.

எதரர் : உன்னை நீ மறக்கவேண்டும் என்று ஒவ்வொரு வினாடியும் உனக்கு நீயே நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறாய். (அவனிடம் படங்களைத் திருப்பிக் கொடுக்கிறான்) நன்றாக மறைத்து வை, (உய்கோ அவற்றை வாங்கித் தன் கோட்டின் உட்புறம் பையில் வைக்கிறான்) நாளை சந்திக்கலாம்.

உய்கோ : சரி.

எதரர் : போய்வருகிறேன், ழெசிகா,

ழெசிகா : போய் வாருங்கள்.

(வாயிற் படியில் எதரர் திரும்புகிறான்)

எதரர் : சன்னல் சாளரங்களை மூடி, கதவுத்தாழ்ப்பாள்களைப் போட்டுக் கொள்ளுங்கள். தோட்டத்தில் யார் சுற்றி அலைகிறார்கள் என்று சொல்ல முடியாது. இது என் கட்டளை,

(வெளியேறுகிறான்)

## காட்சி — 5

உய்கோ, ழெசிகா.

உய்கோ கதவுவரை சென்று சாவியை இருமுறை சுழற்றிப்பூட்டுகிறான்.

உய்கோ : கைத்துப்பாக்கி எங்கே?

ழெசிகா : டார்லிங் நான் இந்த வேடிக்கையை எந்த அளவுக்கு ரசித்தேன், தெரியுமா? நீங்கள் சரியான ஆண் பிள்ளைகளிடம் மாட்டிக்கொண்டு தவிப்பதை நான் இப்போதுதான் முதல் முறையாகப் பார்க்கிறேன்.

உய்கோ : ழெசிகா, துப்பாக்கி எங்கே?

ழெசிகா : இத்தகைய சந்தர்ப்பங்களில் எவ்வாறு இருக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியவில்லை. அதோ, அந்த ஜன்னல், அதன் வழியாக வெளியிலிருந்து நம்மைப் பார்க்க முடியும்.

(உய்கோ சென்று ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு அவளிடம் வருகிறான்)

உய்கோ : இப்போது!

ழெசிகா : (துப்பாக்கியைத் தன் உள்ளாடையிலிருந்து எடுத்து) சோதனை போடும் வேலைக்கு எதரர் ஒரு பெண்ணையும் வைத்துக் கொள்வதுதான் நல்லது. எனக்கு அந்த வேலையைத் தரும்படி கேட்கலாம் என்று நினைக்கிறேன்.

உய்கோ : எப்போது இதை ஒளித்துவைத்துக்கொண்டாய்?

ழெசிகா : நீங்கள் அந்த இரண்டு காவல்நாய்களுக்குத் கதவைத் திறக்கச் சென்றபோது.

உய்கோ : நீ என்னை நன்றாக ஏமாற்றிவிட்டாய்! அவன் தந்திரத்தில் நீ மாட்டிக்கொண்டுவிட்டாயோ என்று நினைத்தேன்.

ழெசிகா : நானா! அவர் முகத்துக்கெதிரிலேயே சிரிக்காத குறைதான், "நான் உங்களை நம்புகிறேன், நான் உலகத்தில் எல்லோரையும் நம்புகிறேன். இதிலிருந்து நீங்களும் பிறர்மேல் நம்பிக்கை



வைக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்" என்றெல்லாம் சொன்னார். என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்? இந்த நம்பிக்கை நாடகமெல்லாம் ஆண்பிள்ளைகளிடம்தான் பலிக்கும், நீங்கள் உணர்ச்சிவசப்பட்டுவிட்டீர்கள்.

உய்கோ : நானா? எப்போது?

ழெசிகா : அவர் உங்களிடம் நம்பிக்கை வைப்பதாக சொன்னபோது.

உய்கோ : அதெல்லாம் நான் ஒன்றும் உணர்ச்சி வசப்படவில்லை.

ழெசிகா : ஆமாம்,

உய்கோ : இல்லை.

ழெசிகா : எப்படியோ! என்றாவது ஒருநாள் ஓர் அழகிய வாலிபனுடன் நீங்கள் என்னைத் தனியாக விட்டுச் சென்றால், 'நான் உன்னை நம்புகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போகாதீர்கள்! ஏனென்றால் இப்போதே சொல்லிவைக்கிறேன்: அது எவ்வகையிலும் என்னைத் தடுத்துவிடாது, எனக்குமட்டும் உங்களை ஏமாற்ற வேண்டும் என்று தோன்றிவிட்டால்.

உய்கோ : எனக்கு அந்தக் கவலையே இல்லை! நான் நிம்மதியாகக் கண்களை மூடிக்கொண்டு சென்று விடுவேன்.

ழெசிகா : நான் உணர்ச்சிவசம் ஆகிவிடுவேன் என்று நினைக் கிறீர்களா?

உய்கோ : இல்லையே நீ ஓர் ஐஸ்கட்டி சிலை மாதிரி. ஐஸ் கட்டியின் ஜில்லிப்பில் எனக்கு நம்பிக்கை உண்டு. மிகப்பெரிய கன்னிவேட்டைக்காரன்கூட உன்னிடத்தில் வந்தால் ஜில்லிட்டுப் போய்விடுவான்! உன்னிடம் கொஞ்சம் கதகதப்பு உண்டுபண்ண அவன் உன்னை வருடுவான். நீ அவன் கைவிரல்களையே உறைந்து போகும்படி செய்துவிடுவாய்!

ழெசிகா : அசடு நீங்கள், நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை (மிகச்சிறிய மௌனம்) நீங்கள் மிகவும்தான் பயந்து விட்டீர்கள்.

உய்கோ : நீயா? (அவளை ஒருகணம் பார்த்துத் தலையைத் திருப்பிக் கொள்கிறான்) உனக்கும் பயமாக இருந்ததா, சொல்,



ழெசிகா : அவர்கள் என்னையும் சோதனை போடப்போகிறார்கள் என்று தெரிந்தவுடன், இரண்டில் ஒன்று என்று தீர்மானித்து விட்டேன். அது ஜார்ஜ் ஆக இருந்தால் என்னை மேலெழுந்த வாரியாகத்தான் தொடுவான் என்பது நிச்சயம் தெரியும். ஸ்லிக்காக இருந்தால் என்னைக் கசக்கித்தான்விட்டிருப்பான். அவன் துப்பாக்கியைக் கண்டுபிடித்துவிடுவான் என்பதைவிட, நான் அவன் கைகளில் என்ன பாடுபட்டிருப்பேனோ என்பது தான் என் பயம்,

உய்கோ : நான் இந்த விவகாரங்களில் உன்னையும் இழுத்து விட்டிருக்கக் கூடாது.

ழெசிகா : அப்படியில்லை. ஒரு திகில்நாயகியாக இருக்க வேண்டும் என்பதுதான் என் லட்சியம்!

உய்கோ : ழெசிகா, இது ஒன்றும் விளையாட்டில்லை. இந்த ஆள் ஆபத்தானவர்.

ழெசிகா : ஆபத்தானவரா? யாருக்கு?

உய்கோ : கட்சிக்கு.

ழெசிகா : கட்சிக்கா? இவர்தாம் கட்சிக்குத் தலைவன் என்றல்லவா நினைத்தேன்?

உய்கோ : கட்சியின் பல தலைவர்களில் இவரும் ஒருவர். இதனாலேயே அவர்....

ழெசிகா : எனக்கு எந்தவித விளக்கமும் வேண்டாம். உங்கள் வார்த்தையை நம்புகிறேன்.

உய்கோ : என்ன நம்புகிறாய்?

ழெசிகா : (கடகடவென்று வாய்ப்பாடு ஒப்பிப்பதுபோல்) இந்த ஆசாமி ஆபத்தானவர் என்று நம்புகிறேன். இவர் போகவேண்டியவர் என்று நம்புகிறேன், நீங்கள் வந்திருப்பது இவரை தீர்த்துக்கட்ட....

உய்கோ : உஸ் (மௌனம்) இதோ என்னைப் பார்! சில சமயம் நீ



என்னை நம்புவதுபோல் நடிக்கிறாய்! உண்மையில் நம்பவில்லை என்று தோன்றுகிறது. வேறு சில சமயங்களில் நீ அடிப்படையில் என்னை நம்புகிறாய், ஆனால் நம்பாத மாதிரி நடிக்கிறாய் என்று தோன்றுகிறது. இதில் எது உண்மை?

ழெசிகா : (சிரித்துகொண்டே) எதுவுமே உண்மையில்லை,

உய்கோ : உன் உதவி எனக்குத் தேவைப்பட்டால் அப்போது என்ன செய்வாய்?

ழெசிகா : இப்போது நான் உங்கள் உதவிக்கு வரவில்லையா?

உய்கோ : உண்மைதான், ஆனால் இந்த மாதிரி உதவி அன்று நான் வேண்டுவது.

ழெசிகா : சுத்த நன்றிகெட்டவர்!

உய்கோ : (அவளைப் பார்த்தவாறு) உன் மனசுக்குள் இருப்பதை மட்டும் என்னால் தெரிந்துகொள்ள முடிந்தால்....

ழெசிகா : என்னையே கேளுங்களேன்!

உய்கோ : (தோளைக் குலுக்கி) உம்.... (சிறுமௌனம்) தெய்வமே ஒரு மனிதனைக் கொல்லப்போகும்போது, மனம் பாராங்கல் போல் கனக்கவேண்டும், சிந்தனையில் ஓர் அமைதி நிலவவேண்டும். (உரக்கக் கூச்சலிடுகிறான்). அமைதி. (சற்றுப் பொறுத்து) அவர் எவ்வளவு அழுத்தமானவராக இருக்கிறார் பார்த்தாயா? எவ்வளவு உயிரோட்டம் உள்ளவராக இருக்கிறார். (சற்றுப் பொறுத்து) உண்மைதான். நிச்சயம் உண்மைதான். நான் அவரைக் கொல்லப்போகிறேன் என்பது உண்மைதான். இன்னும் ஒரு வாரத்தில் அவர் தரையில் பிணமாக விழுந்து கிடக்கப்போகிறார், ஐந்து குண்டுகளால் துளைக்கப்பட்டு (சிறிது நேரம் கழித்து) என்ன நாடகம் !

ழெசிகா : (சிரிக்கிறாள்) நீங்கள் ஒரு கொலைகாரனாகப் போகிறீர்கள் என்று என்னை நம்பவைப்பதற்கு முன்பாக உங்களையே நீங்கள் முதலில் நம்பவைக்கவேண்டும்.

உய்கோ : என்னைப் பார்த்தால் நம்பிக்கை கொண்டவன் மாதிரி தோன்றவில்லையா?

ழெசிகா : துளிக்கூட இல்லை. நீங்கள் இந்த வேஷத்தில் சரியாக நடிக்கவில்லை,

உய்கோ : இல்லை, நீதான் வேஷம் போடுகிறாய்; நடிக்கிறாய்.

ழெசிகா : இல்லை, நீங்கள் தான், அவரை உங்களால் எப்படிக் கொல்ல முடியும்? துப்பாக்கி என்னிடமல்லவா இருக்கிறது?

உய்கோ : அந்த துப்பாக்கியை என்னிடம் கொடு.

ழெசிகா : நிச்சயம் கொடுக்க மாட்டேன். இது நான் சம்பாதித்தது. நான் இல்லாவிட்டால் இது உங்களிடமிருந்து பறி போயிருக்கும்.

உய்கோ : அந்தத் துப்பாக்கியை என்னிடம் கொடு,

ழெசிகா : உஹூம். நிச்சயம் உங்களிடம் கொடுக்கமாட்டேன்.

உய்கோ: (போகட்டும் என விட்டுவிட்டவன் போல் சிறிது பாவனை செய்து பின் திடீரென்று அவள் மீது பாய்கிறான். முந்தையக் காட்சியில் கண்ட அதே நிலை; இருவரும் கட்டிலில் கட்டிப்புரண்டு சிரித்துக் கூச்சலிடுகிறார்கள். உய்கோ துப்பாக்கியை வைத்திருக்கும் அவள் கையைப் பற்றி இழுக்கிறான். அவள் கூச்சலிடுகிறாள்) ஜாக்கிரதை! ஜாக்கிரதை! துப்பாக்கி வெடிக்கப்போகிறது.

(திரை)



## அரங்கமைப்பு நான்கு

### எதரரின் அலுவலகம்

ஆடம்பரமில்லாத ஆனால் வசதியான அறை. வலது புறம் அலுவலக மேசை, நடுவில் புத்தகங்களும், தாள்களும் நிறைந்த மற்றோர் மேசை. அதன் விரிப்பு, கீழே தரையில் புரளுகிறது. இடப்புற பக்கவாட்டில் ஒரு ஜன்னல், அதன் வழியே தோட்டத்து மரங்கள் தெரிகின்றன. பின்புறம் வலது பக்கமாக ஒரு கதவு, கதவின் இடப்புறம் சமையல் மேசை, அதன் மேல் காஸ் அடுப்பு, அடுப்பில் ஒரு காபி பெர்கொலேட்டர். அங்குமிங்கும் சில நாற்காலிகள். பிற்பகல் நேரம்.

அறையில் உய்கோ தனியாக இருக்கிறான். அலுவலக மேசையை நெருங்கி, எதரரின் பேனாவை கையில் எடுத்துத் தொட்டுப் பார்க்கிறான். பிறகு காஸ் அடுப்புக்குச் சென்று பெர்கோலேட்டரை எடுத்து மெல்ல விசிலடித்தவாறே பார்க்கிறான், ழெசிகா மெல்ல நுழைகிறாள்.

### காட்சி – 1

ழெசிகா : அந்த பெர்கொலேட்டரில் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்?

உய்கோ : (அவசரமாக பெர்கொலேட்டரை வைக்கிறான்.) ழெசிகா நீ இந்த அலுவலகத்துக்குள் வரக்கூடாது என்று தெரியுமல்லவா?

ழெசிகா : அந்த பெர்கொலேட்டரில் என்ன செய்து கொண்டு இருந்தீர்கள்?

உய்கோ : நீ இங்கு எதற்காக வந்தாய்?

ழெசிகா : உங்களைப் பார்க்கத்தான் அத்தான் !

உய்கோ : சரி பார்த்தாகிவிட்டது—ஓடிப்போய்விடு. எதரர் வரப் போகிறார்.

ழெசிகா : உங்களைப் பிரிந்து எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன் தெரியுமா?

உய்கோ : ழெசிகா எனக்கு விளையாட நேரமில்லை,

ழெசிகா : கொஞ்சம் இருங்கள் (தன் ஆடை பையில் தேடி) இதை உங்களிடம் கொடுத்து விட்டுப்போக வந்தேன்.



உய்கோ : என்ன அது?

ழெசிகா : (தன் பையிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்து தன் உள்ளங்கையில் வைத்து உய்கோவிடம் நீட்டுகிறாள்) இதை நீங்கள் மறந்து விட்டீர்கள்.

உய்கோ : மறக்கவில்லை — நான் அதை எப்போதும் கொண்டு வர வேண்டும் என்று கிடையாது.

ழெசிகா : இது இல்லாமல் நீங்கள் இருக்கக் கூடாது. அதனால்தான் கொண்டு வந்தேன்,

உய்கோ : ழெசிகா நான் என்ன சொல்லியும் உனக்குப் புரிந்ததாகத் தெரியவில்லை, முடிவாகச் சொல்கிறேன், நீ மறுபடி இங்கே காலடி வைக்கக்கூடாது,

ழெசிகா : ஆறு வயதுக் குழந்தையிடம் பேசுவது போல் என்னிடம் பேசுகிறீர்கள்.

உய்கோ : தவறு யாருடையது? தாங்க முடியாத ஒரு நிலைமை வந்து விட்டது. உன்னால் சிரிக்காமல் என்னைப் பார்க்க முடியவில்லை. நான் சொல்வது புரிகிறதா?

ழெசிகா : நன்றாகப் புரிகிறது.

உய்கோ : சரி, அப்படியென்றால், முதலில் அந்தத் துப்பாக்கியை உள்ளே வை,

ழெசிகா : என்னால் முடியவில்லை.

உய்கோ : ழெசிகா!

ழெசிகா : இது உங்களுடையது, இதை நீங்கள்தான் வைத்துக் கொள்ள வேண்டும்,

உய்கோ : அது இப்போது எனக்குத் தேவையில்லை என்று நான்தான் சொல்கிறேனே.

ழெசிகா : பிறகு நான்மட்டும் அதை வைத்துக்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள்?



உய்கோ : நேராக நம் வீட்டுக்குப் போ. அதை என் பெட்டியிலே வை.

ழெசிகா : எனக்கு வீட்டுக்குப் போக விருப்பமில்லை. நீங்கள் மிகவும் கொடுமைக்காரர்,

உய்கோ : நீ இதைக் கொண்டுவராமல் இருந்திருக்கலாமே!

ழெசிகா : நீங்கள் இதை மறந்துவிட்டு வராமல் இருந்திருக்கலாமே!

உய்கோ : நான்தான் அதை மறக்கவில்லை என்று சொல்கிறேனே,

ழெசிகா : மறக்கவில்லை? அப்படியென்றால் உங்கள் திட்டத்தை மாற்றிக் கொண்டுவிட்டீர்களா?

உய்கோ : இல்லை, மாற்றிக்கொள்ளவில்லை.

ழெசிகா : முன்பு திட்டமிட்டபடி செய்கிற எண்ணம் இருக்கிறதா, இல்லையா?

உய்கோ : இருக்கிறது இருக்கிறது இருக்கிறது—ஆனால் இன்று இல்லை,

ழெசிகா : ஏன் இன்று கூடாது? எனக்கு மிகவும் போரடிக்கிறது. நீங்கள் கொடுத்த நாவல்களையெல்லாம் படித்து முடித்து விட்டேன். நாள் முழுவதும் சித்திரத்தில் தீட்டிய கவர்ச்சிக் கன்னியைப் போல் கட்டிலிலே படுத்துக்கிடக்கப் பிடிக்கவில்லை, உடம்பு பருத்து விடும். நீங்கள் எதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

உய்கோ : ழெசிகா, மறுபடியும் விளையாட ஆரம்பித்துவிட்டாயா?

ழெசிகா : நீங்கள்தான் விளையாடுகிறீர்கள். என்னை வியப்பில் ஆழ்த்த வேண்டும் என்பதற்காகக் கடந்த 10 நாள்களாக பெரிய அலட்டல் பண்ணுகிறீர்கள், ஆனால் அவர் இன்னும் உயிரோடிருக்கிறார். இது விளையாட்டு என்றே வைத்துக் கொண்டாலும் மிகவும் நீண்டுகொண்டேபோய்க்கொண்டு இருக்கிறது,

உய்கோ : இது விளையாட்டுச் சமாசாரமில்லை என்று உனக்கு நன்றாகவே தெரியும்.

ழெசிகா : (விரக்தியுடன்) அப்படியானால் இன்னும் மோசம். செய்ய வேண்டும் என்று தீர்மானித்ததைச் செய்யாமல் இருக்கிறவர்களை எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்காது. நான் உங்களை நம்ப வேண்டுமென்றால், நீங்கள் இன்றே அதை முடித்தாக வேண்டும்.

உய்கோ : இன்று சந்தர்ப்பச் சூழ்நிலை சரியில்லை,

ழெசிகா : (சாதாரணகுரலில்) பார்த்தீர்களா?

உய்கோ : ஐயோ, உன்னோடு மிகவும் தொந்தரவாகப் போய் விட்டது. இன்று இங்கு முக்கியமானவர்கள் சிலர் வரப் போகின்றனர்,

ழெசிகா : எத்தனை பேர்?

உய்கோ : இருவர்,

ழெசிகா : அவர்களையும் கொன்றுவிடுங்கள்.

உய்கோ : மற்றவர்களுக்கு விருப்பம் இல்லாதபோது, விளையாடு கின்றவர் போல இடையூறு வேறு கிடையாது. எனக்கு உதவிசெய் என்று நான் உன்னைக் கேட்கவில்லை. உபத்திரவம் செய்யாமல் சும்மா இருந்தால் போதும்,

ழெசிகா : சரி சரி, எப்போது நீங்கள் என்னை உங்கள் வாழ்க்கையில் இருந்து பிரித்துத் தனியாகப் பார்க்கிறீர்களோ, உங்கள் விருப்பப்படியே செய்துகொள்ளுங்கள். ஆனால் இந்தத் துப்பாக்கியை வாங்கிக்கொள்ளுங்கள்.

உய்கோ : நான் இதை வாங்கிக்கொண்டுவிட்டால், இங்கிருந்து போய் விடுவாயா?

ழெசிகா : வாங்கிக்கொண்டு பிறகு பாருங்கள்,

உய்கோ : (துப்பாக்கியை வாங்கித் தன் பைக்குள் வைத்துக் கொள்கிறான்) சரி ஓடிப்போய்விடு.

ழெசிகா : ஒரே ஒரு நிமிடம். என் கணவர் வேலை செய்யும் அலுவலகத்தை பார்க்க எனக்கு உரிமையில்லையா, என்ன?



(எதரரின் மேசைக்குப் பின்புறம் சென்று, அதைக் காட்டி) இங்கு உட்காருவது யார்— அவரா, நீங்களா?

உய்கோ : (வேண்டா வெறுப்பாக) அவர். (தன் மேசையைக்காட்டி) இது என் மேசை.

ழெசிகா : (அவன் சொல்வதைக் கவனியாமல்) இதுதான் அவர் கையெழுத்தா? (மேசைமேல் இருந்த ஒரு காகிதத்தை எடுத்துக்காட்டுகிறாள்)

உய்கோ : ஆமாம்.

ழெசிகா : (மிகுந்த ஆர்வத்துடன்) அடாடாடா!

உய்கோ : அதை அங்கேயே வை, நீ உடனே இங்கிருந்து போ,

ழெசிகா : இது பியானோமுன் போடப்படும் இருக்கை மாதிரி இருக்கிறது.

உய்கோ : அதேதான்.

ழெசிகா : (அதில் அமர்ந்து, சூழலச் செய்கிறாள்) எவ்வளவு நன்றாக இருக்கிறது! இதில் அமர்ந்துகொண்டு புகை பிடித்த வண்ணம் இதில் சுழன்றபடியே பேசிக் கொண்டிருப்பார் போலும்!

உய்கோ : ஆமாம்.

ழெசிகா : (பீரோவிலிருந்து ஒரு கண்ணாடிபுட்டியை எடுத்து, மூடியைக் கழற்றி, மோந்துபார்க்கிறாள்) குடிப்பாரா?

உய்கோ : நிறைய.

ழெசிகா : அவராகக் கொடுத்தாலும் நீங்கள் குடிக்காதீர்கள், சொல்லிவிட்டேன். உங்கள் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது.

உய்கோ : நீ ஒன்றும் உபதேசம் செய்யத் தேவையில்லை. எனக்கு மது, புகையிலை, அதிக வெயில், அதிகக் குளிர், எதுவுமே ஒத்துக் கொள்ளாது என்று எனக்கு நன்றாகவே தெரியும்.

ழெசிகா : (காஸ் அடுப்பைக் காண்பித்து) இது என்ன? தாமே சமைத்துக்கொள்வாரா?



உய்கோ : ஆமாம்.

ழெசிகா : (வாய்விட்டுச் சிரித்து) தேவையே இல்லையே. உங்களுக்குச் சமைப்பதோடு சேர்த்து அவருக்கும் நானே சமைத்து விடுவேனே! இவர் நம்மோடு வந்து சாப்பிட்டுவிட வேண்டியது தானே?

உய்கோ : அவரைப் போல் உன்னால் சமைக்க முடியாது. மேலும் அவருக்கு இது ஓர் இனிமையான பொழுதுபோக்கு என்று நினைக்கிறேன். காலையில் அவர்தான் எங்கள் இருவருக்கும் காபி தயாரிப்பார். அருமையான காப்பி — பிளாக் மார்க்கெட்டில் வாங்கிய காப்பிப்பொடி.

ழெசிகா : (காபி பெர்கொலேட்டரைக் காண்பித்து) இதிலா?

உய்கோ : ஆமாம்.

ழெசிகா : நான் உள்ளே நுழைந்தபோது உங்கள் கையிலே வைத்துக் கொண்டிருந்தீர்களே, அது இதுதானே?

உய்கோ : ஆமாம்,

ழெசிகா : நீங்கள் எதற்காக அதை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்? அதில் என்ன தேடினீர்கள்?

உய்கோ : தெரியவில்லை, (சற்றுப் பொறுத்து) அவர் அதைத் தொடும் போது அது நிஜம்போல் தோன்றுகிறது. (கையில் அதை எடுத்து வைத்துக்கொண்டு) அவர் தொடுவதெல்லாம் உயிர் பெற்றுவிடுகிறது. கோப்பைகளில் காப்பியை ஊற்றுவார். நான் அதைக் குடிப்பேன்; அவர் குடிப்பதையும் பார்ப்பேன், அப்போது காப்பியின் உண்மையான சுவை அவர் நாவிலேயே இருப்பது போன்ற ஓர் உணர்வு, (சற்றுப் பொறுத்து) உண்மையான சூடு, உண்மையான வெளிச்சம், காபியின் உண்மையான சுவை இவையெல்லாம் மறையப்போகின்றன, இது மட்டும்தான் மிஞ்சும். (பெர்கொலேட்டரைக் காண்பிக்—கிறான்)

ழெசிகா : எது, இதுவா?



உய்கோ : (அந்த அறைமுழுதையும் கையை விரித்துக் காண்பித்து) இவை எல்லாமேதாம். பொய்கள் மட்டும் எஞ்சி நிற்கும் (பெர்கொலேட்டரை வைக்கிறான்) — நான் ஒரு நாடக அரங்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். (சிந்தனையில் ஆழ்ந்து விடுகிறான், திடுக்கிட்டு)

உய்கோ : அதோ அவர் வருகிறார். ஜன்னல் வழியாகக் குதித்து ஓடிவிடு. (அவளை இழுத்துச்செல்கிறான்)

ழெசிகா : (அவன் இழுப்பதை எதிர்த்து) நீங்கள் இருவரும் தனியே இருக்கும்போது எப்படி இருக்கிறீர்கள் என்று பார்க்க விரும்புகிறேன்,

உய்கோ : (அவளைப் பிடித்து இழுத்து) — சீக்கிரம் வா... ம்...

(உய்கோ இடதுகையால் ஜன்னல்கதவைத் திறக்கிறான். ழெசிகா அவன் பிடியிலிருந்து தப்பி, மேசையின் கீழே மறைந்து கொள்கிறாள், எதரர் உள்ளே நுழைகிறார்).

## காட்சி – 2

உய்கோ, ழெசிகா, எதரர்

எதரர் : அங்கே கீழே என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

ழெசிகா : நான் ஒளிந்துகொண்டிருக்கிறேன்,

எதரர் : எதற்காக?

ழெசிகா : நான் இல்லாதபோது நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதைப் பார்ப்பதற்கு,

எதரர் : உன் எண்ணம் ஈடேறவில்லை (உய்கோவிடம்) யார் அவளை உள்ளேவிட்டது?

உய்கோ : தெரியாது.

எதரர் : இவள் உன் மனைவி, கொஞ்சம் அடக்கி வை, (உய்கோவிடம்) இவள் உன்னை மதிப்பதாகத் தெரியவில்லை,

உய்கோ : மதிப்பதில்லைதான்.

எதரர் : பின் ஏன் மணந்துகொண்டாய்?

உய்கோ : இவள் எனக்கு மரியாதை அளிக்காத காரணத்திற்காகவே தான்,

எதரர் : ஒரு கட்சியில் இருப்பவர் அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருவரையேதான் மணந்துகொள்ள வேண்டும்.

உய்கோ : ஏன் அப்படி?

எதரர் : சுலபமாகப் போய்விடும்,

ழெசிகா : நான் கட்சியை சேர்ந்தவள் இல்லை என்று எப்படி சொல்கிறீர்கள்?

எதரர் : பார்த்தாலே தெரிகிறதே. (அவளை ஏற இறங்கப் பார்க்கிறான்) உனக்கு ஒன்றுமே தெரியாது, காதலிப்பதைத் தவிர...

ழெசிகா : அது என் குற்றமா?

எதரர் : அதைப்பற்றி எனக்கென்ன தெரியும்? எல்லோரையும் போல நீயும் பாதி உடந்தை, பாதி அகப்பட்டுக் கொண்டவள் என்று நினைக்கிறேன்.

ழெசிகா : (திடீர் சீற்றத்துடன்) நான் யாருக்கும் உடந்தையில்லை. என் விருப்பத்தைக் கேட்காமலே என் தலைவிதி தீர்மானிக்கப்பட்டு விட்டது,

எதரர் : இருக்கலாம். எப்படியும் பெண்விடுதலைப் பிரச்சினையில் எனக்கு எந்தவித ஆர்வமும் கிடையாது,

ழெசிகா : (உய்கோவைக் காட்டி) நான் இவருக்குத் தீங்கு இழைக்கிறேன் என்று நினைக்கிறீர்களா?

எதரர் : இதை என்னிடம் கேட்பதற்குத்தான் நீ இங்கு வந்தாயா?

ழெசிகா : ஏன் கூடாது?

எதரர் : நீ இவனுடைய ஆடம்பர அலங்காரப்பொருள் என்று நினைக்கிறேன். எங்களிடம் வந்து சேரும் பூர்ழுவா குடும்ப இளைஞர்கள், தங்கள் கடந்த கால ஆடம்பர வாழ்க்கையின் நினைவுச்சின்னமாக எதையாவது எடுத்துவரத் துடிப்பார்கள்.



சிலர் தங்கள் சிந்தனைச் சுதந்திரத்தைக் கொண்டு வருவார்கள்; வேறு சிலர் டையில் அணிந்து கொள்ளும் ஊசிகளை எடுத்து வருவார்கள்; இவன் தன் மனைவியான உன்னைக் கொண்டுவந்திருக்கிறான்.

ழெசிகா : ஆனால் இயல்பாகவே உங்களுக்கு எந்தவித ஆடம்பரப் பொருளும் தேவையில்லையாக்கும்!

எதரர் : இயல்பாகத் தேவையில்லைதான். (ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்) போதும், ஓடிப்போய்விடு, இனி இந்தப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காதே.

ழெசிகா : மிகவும் சரி—உங்களைப் பரஸ்பர ஆண்கள் அந்தரங்கத்திற்கு விட்டுச் செல்கிறேன்.

(கம்பீரமாக வெளியேறுகிறாள்)

## காட்சி – 3

எதரர் , உய்கோ.

எதரர் : இவள் உனக்குத் தேவைதானே?

உய்கோ : அதில் என்ன சந்தேகம்?

எதரர் : அப்படியென்றால் அவள் மீண்டும் இங்குக் காலடி எடுத்து வைக்காமல் பார்த்துக்கொள். ஓர் ஆண், ஒரு நல்ல பெண் இவ்விருவருள் ஒருவரை நான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால், நான் ஆணைத்தான் தேர்ந்தெடுப்பேன், ஆனால் என் வேலையை அனாவசியமாகக் கடினமாக்காதே,

உய்கோ : இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்படி யார் உன்னிடம் சொன்னது?

எதரர் : அது முக்கியமில்லை, ஆனால் நான் தேர்ந்தெடுத்தது உன்னைத்தான்,

உய்கோ : நாலு பத்து.

எதரர் : அவர்கள் வருகையில் தாமதம். (ஜன்னலுக்குச் சென்று, வெளியே எட்டிப் பார்த்துவிட்டுப் பிறகு திரும்பி வருகிறான்)



எதரர் : இன்று வராவிட்டால் அவர்கள்தான் அதற்காக வருந்த நேரிடும்,

உய்கோ : யார் அவர்கள்?

எதரர் : நீயேதான் பார்க்கப்போகிறாயே, அவர்கள் உன் உலகத்தைச் சேர்ந்தவர்கள். (சில அடிகள் நடக்கிறான்) எனக்குக் காத்திருக்கப் பிடிக்காது. (உய்கோவிடம் வந்து) அவர்கள் வந்துவிட்டால், விஷயம் முடிந்த மாதிரி. ஆனால் கடைசி நிமிஷத்தில் அவர்கள் பயந்துவிட்டால், மீண்டும் எல்லாவற்றையும் ஆரம்பத்திலிருந்து தொடங்க வேண்டியிருக்கும், அதுவரை நான் இருக்க மாட்டேன் என்று நினைக்கிறேன். உனக்கு என்ன வயது?

உய்கோ : இருபத்தொன்று.

எதரர் : நீ பரவாயில்லை; இருப்பாய்.

உய்கோ : உனக்கு அப்படியொன்றும் வயதாகிவிடவில்லை,

எதரர் : எனக்கு வயதாகவில்லைதான், ஆனால் பலர் என்னைக் குறிபார்த்துக் கொண்டிருக்கின்றனர். (தோட்டத்தைக் காட்டி) இந்தச் சுவர்களுக்கு அப்பால் இரவும் பகலும் சதா என்னைத் தீர்த்துக்கட்டுவதற்கு சிலர் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர், நான் என்னைக் காப்பாற்றிக் கொள்வதைப் பற்றிய சிந்தனையிலேயே சதா இருப்பதில்லையாதலால் இறுதியில் அவர்கள்தான் நிச்சயம் வென்றுவிடுவார்கள்,

உய்கோ : அவர்களை உனக்குத் தெரியுமா?

எதரர் : தெரியும், ஏதோ கார் சத்தம் கேட்கவில்லை?

உய்கோ : இல்லை (உற்று கவனிக்கின்றான்) இல்லை.

எதரர் : அவர்கள்ஆசாமி ஒருத்தனுக்கு சுவர்ஏறிக் குதிக்க இது ஒரு நல்ல தருணம். வேலையைக் கச்சிதமாக முடிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

உய்கோ : (தனக்குள் மெதுவாக) இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.



எதரர் : (அவனைப் பார்த்து) இப்போது வரப்போகிறவர்களை நான் சந்திக்க முடியாமல் போனால் அவர்களுக்கு நல்லது. (மேசைக்குச் சென்று குடிக்க மதுவை ஊற்றிக்கொள்கிறான்) உனக்கு வேண்டுமா?

உய்கோ : வேண்டாம், (சற்று நேரம் கழித்து) உனக்குப் பயமாக இருக்கிறதா?

எதரர் : எதைப் பற்றி?

உய்கோ : சாவதைப் பற்றி.

எதரர் : இல்லை. ஆனால் எனக்கு அவசரம், எல்லாவற்றிலும் எனக்கு அவசரம்தான். முன்பெல்லாம் எவ்வளவு வேண்டுமானாலும் காத்திருப்பேன்; ஆனால் இப்போது முடியவில்லை.

உய்கோ : இந்த அளவுக்கு உனக்கு அவர்கள்மேல் வெறுப்பா?

எதரர் : அப்படியில்லை, அரசியல்கொலைகள் பற்றிக் கொள்கையளவில் எனக்குச் சம்மதம்தான், இது எல்லா நாடுகளிலும் நடப்பது தானே,

உய்கோ : எனக்குக் கொஞ்சம் மது ஊற்றிக்கொடு.

எதரர் : (வியப்புடன்) இந்தா (மதுப் புட்டியை எடுத்து அவனுக்கு ஊற்றிக் கொடுக்கிறான். உய்கோ அவனை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டே குடிக்கிறான்) என்ன அப்படி என்னைப் பார்க்கிறாய், முன் பின் பார்க்காதமாதிரி?

உய்கோ : நான் உன்னைப் பார்த்ததே இல்லை.

எதரர் : உனக்கு இது ஒரு தற்காலிக இடைநிலை வேலை, இயற்கைதானே – உன் எதிர்காலத்தை மனத்தில் கொண்டு நீ என்னை நோக்குகிறாய், 'இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் இவனுடன் கழித்துவிட்டு, இவன் இறந்தபிறகு வேறு ஓர் இடத்திற்குச் சென்று ஏதாவது செய்ய வேண்டியது' என்கிற எண்ணத்தில் நீ இருக்கிறாய்.

உய்கோ : வேறு எதுவும் செய்வேனா என்பதே சந்தேகமாக இருக்கிறது.

எதரார் : இருபது ஆண்டுகளுக்குப்பின் உன் நண்பர்களிடம் சொல்வாய்: "அந்தக் காலத்தில் நான் எதராருக்குச் செயலாளனாக இருந்தேன்" என்று, இருபது வருடம் சென்றபின் – விந்தையாகத்தான் இருக்கிறது.

உய்கோ : இருபது வருடம் கழித்து...

எதரார் : ஆமாம்.

உய்கோ : அது மிகவும் தொலைவு!

எதரார் : ஏன்... உனக்கு ஏதாவது காச நோய் அது இது...

உய்கோ : இல்லை,,, இன்னும் கொஞ்சம் மது ஊற்று (எதரார் ஊற்றிக் கொடுக்கிறான்) நான் கிழவனாகும்வரை வாழ்வேனென்று எனக்கு என்னவோ தோன்றவில்லை. எனக்கும் மிக்க அவசரம்தான்.

எதரார் : (அவனிடம் சென்று) தம்பி, இதோ கவனி... (நின்று உற்றுக் கவனிக்கிறான்). இதோ அவர்கள்தாம் (ஜன்னலுக்குச் செல்கிறான், உய்கோ பின் தொடர்கிறான்) அதோ வாட்டசாட்டமாக இருப்பவன்தான் கார்ஸ்கி, பெண்டகான் அமைப்பின் செயலாளர்; குண்டாக இருப்பவன் இளவரசர் பால்.

உய்கோ : இடைக்கால அரசரின் மகனா?

எதரார் : ஆம். (அவன் முகபாவம் இறுக்கமாக மாறுகிறது. தன்னம்பிக்கை நிரம்பியதாகவும், எதிலும் ஆர்வமற்றது போலவும் மாறுகிறது) நீ குடித்தது போதும், இதோ உன் கிளாஸைக் கொடு. (பிடுங்கி அதில் இருப்பதை ஜன்னல் வழியே வீசிக் கொட்டுகிறான்) போய் அங்கு அமர்ந்து கொள். நாங்கள் பேசுவதை எல்லாம் நன்கு கவனித்துக்கொள், நான் சமிக்ஞை செய்தால் குறிப்பெடுத்துக்கொள், (ஜன்னல் கதவை மூடிவிட்டுத் தன் இருப்பிடத்தில் சென்று அமர்கிறான்)



## காட்சி – 4

எதரார், உய்கோ, காஸ்கி, இளவரசர் பால், ஸ்லிக், ஜார்ஜ்.

இருவர் உள்ளே நுழைகிறார்கள். அவர்கள்முதுகில் மிஷின் துப்பாக்கி முனையை வைத்து அழுத்தியவாறே, ஸ்லிக்–ஜார்ஜ் இருவரும் பின்னே வருகிறார்கள்.

கார்ஸ்கி : நான்தான் கார்ஸ்கி.

எதரார் : (இருக்கையிலிருந்து எழுந்திருக்காமலேயே) அடையாளம் தெரிகிறது.

கார்ஸ்கி : என்னுடன் வந்திருப்பவர் யார் என்று தெரிகிறதா?

எதரார் : ம்....

கார்ஸ்கி : அப்படியென்றால் உங்கள் குண்டர்களைப் போகச் சொல்லிவிடலாமே,

எதரார் : ஓகே. தம்பிகளா நீங்கள் போகலாம். (ஸ்லிக், ஜார்ஜ் இருவரும் வெளியேறுகிறார்கள்)

கார்ஸ்கி : (கிண்டலாக) நல்ல பாதுகாப்புடன்தான் இருக்கிறீர்கள்.

எதரார் : இப்போது சில நாட்களாகச் சில முன் எச்சரிக்கையுடன் நான் இல்லாமல் இருந்தால், இப்போது உங்களை வரவேற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்காது!

கார்ஸ்கி : (உய்கோவின் பக்கம் திரும்பி) இது யார்?

எதரார் : என் செயலர், இவர் நம்முடன் இருப்பார்,

கார்ஸ்கி : (உய்கோவை நெருங்கியவாறு) ஓ! நீங்கள்தான் பரீனுடைய மகன் உய்கோவா? (உய்கோ மௌனம்). இவர்கள் கோஷ்டியிலேயா இருக்கிறீர்கள்?

உய்கோ : ஆமாம்.

கார்ஸ்கி : போன வாரம் உங்கள் தந்தையைப் பார்த்தேன். அவரைப் பற்றிய செய்தி தெரிந்துகொள்ளவேண்டும் என்கிற ஆர்வம் இன்னமும் இருக்கிறதா?

உய்கோ : இல்லை.



கார்ஸ்கி : அனேகமாக அவருடைய மரணத்திற்கு நீங்கள் பொறுப்பேற்க வேண்டியிருக்கலாம்,

உய்கோ : என்னுடைய பிறப்பிற்கு அவர்தான் பொறுப்பு என்பது அனேகமாக நிச்சயமான விஷயம். ஆகையால் எங்களிடையே கணக்குத் தீர்ந்துவிட்டது.

கார்ஸ்கி : (குரலை உயர்த்தாமல்) நீங்கள் மிகவும் பரிதாபத்துக் குரியவர்.

உய்கோ : இதோ பாருங்கள்,,,

எதரார் : ஸ்...ஸ்... நீ ஒன்றும் பேசாதே. (கார்ஸ்கியிடம்) நீங்கள் இவ்வளவு தூரம் வந்தது என்னுடைய செயலரை அவமதித்துப் பேசுவதற்காக இல்லை என்று நினைக்கிறேன், அப்படியென்றால், உங்களை உட்காரும்படி கேட்டுக்கொள்கிறேன், (அவர்கள் அமர்கிறார்கள்) மது பானம் அருந்துகிறீர்களா?

கார்ஸ்கி : நன்றி.

இளவரசர்: எனக்குக் கொஞ்சம். (எதரார் ஊற்றித் தருகிறார்)

கார்ஸ்கி : அந்தப் பிரபலமான எதரார் நீங்கள்தானா? (அவரை உற்று நோக்குகிறார்) நேற்று முன்தினம்கூட உங்களுடைய ஆட்கள் எங்கள் ஆசாமிகளைச் சுட்டிருக்கிறார்கள்,

எதரார் : காரணம்?

கார்ஸ்கி : ஒரு கார்ஷெட்டில் ஆயுதக்கிடங்கு வைத்திருந்தோம். உங்கள் ஆட்கள் அதைக் கைப்பற்ற வந்தார்கள். சுருக்கமாகச் சொன்னால் இதுதான் விஷயம்.

இளவரசர்: நாம் வந்த விஷயத்தைப் பற்றி பேசுவது நல்லது என்று நினைக்கிறேன்.

எதரார் : சரி. சொல்லுங்கள், நான் கேட்கத் தயார்.

கார்ஸ்கி : சொல்ல வேண்டியது நீங்கள். நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

எதரார் : அடிப்படையிலேயே ஏதோ தவறு என்று நினைக்கிறேன்,

கார்ஸ்கி : நானும் அப்படித்தான் நினைக்கிறேன். எங்கள் பரிசீலனைக்காக முடிவான ஒரு திட்டத்தை நீங்கள் கூறப் போகிறீர்கள் என்று



நினைக்காமல் இருந்தால், இவ்வளவு மெனக்கெட்டு உங்களைப் பார்க்க வந்திருக்க மாட்டேன்,

எதரார் : என்னிடம் எந்தத் திட்டமும் இல்லை.

கார்ஸ்கி : மிகவும் சரி. (எழுந்திருக்கிறான்)

இளவரசர்: தயவுசெய்து கொஞ்சம் உட்காருங்கள் கார்ஸ்கி; இந்த ஆரம்பமே சரியில்லை. இந்தப் பேச்சுவார்த்தையைச் சிறிது சுமுகமான முறையில் நடத்த முயலவேண்டும்.

கார்ஸ்கி : (இளவரசரிடம்) சுமுகமான முறையிலா? இவருடைய வேட்டை நாய்கள் இரண்டும் நம்மைத் துப்பாக்கி முனையில் தள்ளிக்கொண்டு வந்து அவர்முன் நிறுத்தியபோது இவர் கண்களில் ஜொலித்த ஒளியை நீங்கள் கவனிக்கவில்லையா? இவர்கள் கூட்டத்திற்கு நம்மைப் பிடிக்காது. உங்கள் வற்புறுத்தலின்பேரில்தான் நான் இந்தச் சந்திப்புக்கு ஒப்புக் கொண்டேனே தவிர, இதனால் எந்தவிதப் பயனும் விளையப் போவதில்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

இளவரசர்: கார்ஸ்கி, போன வருடம் என் தந்தையைக் குறிவைத்து இரண்டு கொலைமுயற்சிக்கு ஏற்பாடு செய்தவர் நீங்கள்! இருந்தாலும் உங்களைச் சந்திக்க நான் ஒப்புக்கொள்ள வில்லையா? நாம் ஒருவரோடு ஒருவர் பரஸ்பர அன்போடு பழகுவதற்குத் தக்க காரணங்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் நாட்டுநலன் என்று வரும்போது நம்முடைய சொந்த விருப்புவெறுப்புகளுக்கு இடமில்லை. (சிறு மௌனத்திற்குப் பின்) எதரார் அவர்களே! உழைக்கும் வர்க்கத்தின் நியாயமான உரிமைகளுக்குக் குரல்கொடுக்க ஏகபோகமாக நீங்கள் ஒருத்தர்மட்டும்தான் இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறீர்கள், அந்தக் கோரிக்கை களுக்கு எப்போதுமே ஆதரவாக இருந்த நானும் என் தந்தையும், இதைச் சிறிது ஒதுக்கி வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. இதற்கு முக்கிய காரணம், நாட்டின் சுதந்திரத்தைக் காப்பதுதான் எங்கள் முழு முதற்கடமை என்பதையும், இதன் காரணமாக மக்களுடைய

அதிருப்தியைச் சாம்பாதித்துக் கொள்ளும் சில கசப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டி வந்தாலும் சரி என்பதையும் நாங்கள் நன்கு உணர்ந்து புரிந்துகொண்டதுதான்.

எதரர் : அதாவது சோவியத் ருஷ்யாவின் மீது போர் தொடுத்தீர்கள்,

இளவரசர்: (இடைமறிப்பைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து) எங்களுடைய வெளிநாட்டுக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத கார்ஸ்கியும் அவர் நண்பர்களும், 'இல்லீரி ஒரே நாடு, ஒரே தலைவனின் கீழ் ஒன்றுபட்டு நிற்கும் வலிமை மிக்க மக்கள்சக்தி என எதிரியின் முன்பாகத் தோற்றமளிக்க வேண்டிய அவசியத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டார்கள்' என்று நினைக்கிறேன். அதனால் தலைமறைவு எதிர்ப்பு அணி ஒன்றை அமைத்தார்கள். ஒருவருக்கு ஒருவர் எந்தவகையிலும் தாழ்வில்லாத நாணயமும் தேசபக்தியும் கொண்ட மனிதர்கள் தற்காலிகமாகப் பிரிந்துநிற்கின்ற சூழ்நிலைகள் இவ்வண்ணம் உருவாகிவிட்டதற்குக் காரணம், அவரவர் தத்தம் கடமை என்ன என்பதைப்பற்றிக் கொண்டுள்ள வேறுபட்ட கண்ணோட்டம்தான். (எதரர் போலியாகச் சிரிக்கிறார்) என்ன?

எதரர் : ஒன்றுமில்லை, மேலே சொல்லுங்கள்,

இளவரசர்: இன்று, திடீரென்று நம் நிலைகள் ஒன்றையொன்று நெருங்கி வந்துகொண்டிருக்கின்றன, நாம் ஒவ்வொருவரும் மற்றவரின் கருத்தோட்டத்தைச் சற்றே விரிவாகப் புரிந்துகொண்டிருப்பது போல் தோன்றுகிறது. பேரழிவு உண்டாக்கும் இந்தத் தேவையற்ற போரைத் தொடர்ந்து நடத்துவதில் என் தந்தைக்கு விருப்பமில்லை, அதே சமயம் எங்களுக்கென்று தனிப்பட்ட ஒரு சமாதான ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும் நிலையிலும் நாங்கள் இல்லை. ஆனால் இராணுவ நடவடிக்கைகளில் இனித் தீவிரம் காட்டப்படமாட்டாது என்பதற்கு நான் உத்தரவாதம் அளிக்கமுடியும். நம்மிடையே உள்ள உட்பூசல்கள் நமது நாட்டுநலனை நிச்சயம் பாதிக்கும் என்பதைக் கார்ஸ்கியும் உணர்கிறார். இன்று தேசிய



ஒற்றுமையை ஏற்படுத்தி அதன்மூலம் நாளை வரவிருக்கும் சமாதானத்துக்கு வழிகோல வேண்டும் என்று நாங்கள் இருதரப்பினருமே விரும்புகிறோம். ஆனால் ஜெர்மனியின் சந்தேகத்தைத் தூண்டிவிடாமல் இந்த ஒருங்கிணைப்புப் பகிரங்கமாக நடைபெற முடியாது. ஆகையால் இன்று இருக்கும் தலைமறைவு இயக்கங்களின் ஆதாரத்தில்தான் இந்த ஒருங்கிணைப்பு நிகழ வேண்டும்.

எதரர் : சரி, அப்புறம்?

இளவரசர்: அப்புறம் என்ன? அவ்வளவுதான். நானும் கார்ஸ்கியும் எங்களிடையே ஏற்பட்ட இந்தக் கொள்கைரீதியான உடன்பாடு என்கிற மகிழ்ச்சியான செய்தியை உங்களிடம் தெரிவிக்க வந்தோம்.

எதரர் : இதில் எனக்கு என்ன சம்பந்தம்?

கார்ஸ்கி : ம்,,, பார்த்தீர்களா? நம் நேரம் வீணாவதுதான் மிச்சம்,

இளவரசர்: (மேற்கொண்டு தொடர்ந்து) இப்படிப்பட்ட கூட்டணி எவ்வளவிற்குப் பரவலானதாக இருக்கிறதோ, அவ்வளவிற்கு நல்லது என்பது தெரிந்த விஷயம், உங்கள் தொழிலாளர் கட்சியும் எங்களுடன் கூட்டுச் சேர விரும்பினால்,,,,

எதரர் : என்ன கொடுப்பீர்கள்?

கார்ஸ்கி : நாம் அமைக்கப்போகும் தேசிய தலைமறைவு கமிட்டியில், உங்கள் கட்சிக்கு இரண்டு பிரதிநிதிகள்.

எதரர் : அதில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள்?

கார்ஸ்கி : பன்னிரண்டு.

எதரர் : (போலியான மரியாதையும் வியப்பும் கலந்த குரலில்) பன்னிரண்டில் இரண்டா?

கார்ஸ்கி : இளவரசர் தம் ஆலோசகர் நாலுபேரை அனுப்பி வைப்பார்; மற்ற ஆறு பிரதிநிதிகள் எங்கள் பெண்டகானைச் சேர்ந்தவர்கள்; தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார்,

எதரர் : (கிண்டல் சிரிப்புடன்) பன்னிரண்டு வாக்குகளில் இரண்டு...!



கார்ஸ்கி: பெரும்பாலான விவசாயிகளின் ஆதரவு (அதாவது மொத்த ஜனத்தொகையில் ஐம்பத்தி ஏழு சதவிகிதம்) எங்கள் பெண்டகானுக்கு* இருக்கிறது. இத்துடன் மத்தியதர வர்க்கத்தினர் அனேகமாக முழுவதும் எங்கள் பக்கம், உங்கள் தொழிலாளர் வர்க்கம் நாட்டின் ஜனத்தொகையில் இருபது சதவிகிதத்திற்கும் குறைவு, அதிலும்கூட முற்றிலும் எல்லோருடைய ஆதரவு உங்களுக்குக் கிடையாது.

எதரர் : சரி... அப்பறம்?

கார்ஸ்கி: நம்முடைய இரண்டு தலைமறைவு இயக்கங்களிலும் சீரமைப்புச் செய்து அடிமட்டத்தில் ஓர் இணைப்பை உண்டாக்கி விடுவோம். அதன்படி உங்கள் ஆட்கள் எங்கள் பெண்டகானில் சேர்ந்துவிடுவார்கள்.

எதரர் : அதாவது எங்கள் படைகளை பெண்டகான் விழுங்கி ஜீரணித்துவிடும் என்று சொல்கிறீர்கள்!

கார்ஸ்கி: நமக்கிடையே மிகச் சிறந்த சமரசத்திட்டம் இதுவாகத்தான் இருக்கமுடியும்.

எதரர் : அதாவது ஓர் எதிரியை அப்படியே அழித்துச் செய்யப்படும் சமரசத் திட்டம்! அதன்பின் எங்களுக்கு மத்திய கமிட்டியிலே இரண்டே இரண்டு வாக்குகள் கொடுப்பது மிகவும் நியாயம்தான்! சொல்லப்போனால் இதுவே மிகவும் அதிகம்கூட,,, காரணம், இந்த இரண்டு வாக்குகளும் எதையும் பிரதிபலிக்கப் போவதில்லையே.

கார்ஸ்கி: இதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று உங்களை யாரும் கட்டாயப்படுத்தவில்லை,

இளவரசர்: (அவசர அவசரமாக) ஆனால் நீங்கள் ஒத்துக் கொண்டால் எங்கள் அரசாங்கம் 39ஆம் வருடத்திய பத்திரிகைகள் கட்டுப்பாட்டுச் சட்டம், தொழிற்சங்க ஒற்றுமைச் சட்டம், தொழிலாளர் அடையாள அட்டை பற்றிய சட்டம் ஆகியவற்றை ரத்துசெய்துவிடத் தானாகவே முன் வரலாம்,

எதரர் : மிகவும் கவர்ச்சியுடையதாய்த்தான் இருக்கிறது.



(மேசையின் மீது ஒரு தட்டு தட்டி) சரி, நம்மைப் பரஸ்பரம் அறிமுகப்படுத்திக் கொண்டு விட்டோம். இனி விஷயத்திற்கு வருவோம். இதோ என்னுடைய நிபந்தனைகள். நான் சொல்கிறேன், நிர்வாகக்குழு ஆறே உறுப்பினர்களைக் கொண்டதாயிருக்கும். எங்கள் தொழிலாளர் அமைப்புக்கு மூன்று வாக்குகள். மற்ற மூன்றை உங்களுக்குள் எப்படியோ பகிர்ந்து கொள்ளுங்கள், தலைமறைவு ஸ்தாபனங்கள் தொடர்ந்து தனியாகவே இருக்கும். எந்தவித கூட்டு நடவடிக்கையும் மத்தியக் கமிட்டியின் அங்கீகாரம் இருந்தால் தான் எடுக்கப்படும். அவ்வளவுதான். வேண்டுமென்றால் ஒத்துக் கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் விடுங்கள்.

கார்ஸ்கி : எங்களைக் கிண்டல் செய்கிறீர்களா?

எதரர் : இதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று உங்களை யாரும் கட்டாயப்படுத்தவில்லை.

கார்ஸ்கி : (இளவரசரிடம்) இவர் போன்ற ஆசாமிகளுடன் ஒத்துப் போக முடியாது என்று நான் முன்பே சொல்லவில்லை? நாட்டு ஜனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள், நிதி வசதி, ஆயுதங்கள், பயிற்சி பெற்ற துணை ராணுவத் துருப்புக்கள், இவைதவிர உயிர்த்தியாகம் செய்திட்டோர் வழியாக நாமடைந்த தார்மீக முன்னுரிமை இவையாவும் நம்பக்கம் இருக்கின்றன. கையில் பைசா காசுகூட இல்லாத இச்சிறு கும்பல் நம் மத்திய கமிட்டியில் கூசாமல் பெரும் பான்மை கேட்கிறது, பார்த்தீர்களா?

எதரர் : ஏற்றுக்கொள்ளவில்லை — அப்படித்தானே?

கார்ஸ்கி: ஆமாம். உங்கள் தயவு எங்களுக்குத் தேவையில்லை.

எதரர் : அப்படியென்றால் நீங்கள் போகலாம். (சிறு தயக்கத்துக்குப் பின் கார்ஸ்கி கதவு நோக்கிச் செல்கிறார், இளவரசர் அசையவில்லை) கார்ஸ்கி, இதோ இளவரசரைப் பார். அவர் உன்னை விட கெட்டிக்காரர். நிலைமையைப் புரிந்துகொண்டு

விட்டார்.

இளவரசர்: (மெல்ல, கார்ஸ்கியிடம்) தக்க பரிசீலனை செய்யாமல் இத்திட்டங்களை நாம் நிராகரித்துவிட முடியாது.

கார்ஸ்கி: (கடுமையாக) இவை திட்டங்கள் அல்ல, மடத்தனமான நிபந்தனைகள். இவைபற்றி விவாதிக்க நான் மறுக்கிறேன். (ஆனால் அசையாமல் நிற்கிறார்)

எதரர் : 42இல் போலீஸ் உங்கள் ஆட்களையும் எங்கள் ஆட்களையும் வேட்டையாடினார்கள். அப்போது இடைக்கால அரசரைக் குறிவைத்துக் கொலை முயற்சிகள் செய்தீர்கள், போர்த் தளவாட உற்பத்தியை நாங்கள் சீர்குலைத்தோம். உங்கள் பெண்டகானைச் சேர்ந்த ஒருத்தர் எங்கள் ஆசாமி ஒருவரைக் கண்டுவிட்டால், நிச்சயம் அந்த இருவரில் ஒருவர் மட்டுமே எஞ்சியிருப்பார், ஆனால் இன்று திடீரென்று ஒருவரை ஒருவர் தழுவிக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறீர்கள். ஏன்?

இளவரசர்: தாய்நாட்டின் நலனுக்காக.

எதரர் : இந்த நலன் 42இல் இல்லாமல் போய்விட்டதா? (சிறு மௌனம்) ருஷ்யர்கள் வெற்றி கொண்டுவிட்டார்கள். ஜெர்மானியத் துருப்புக்கள் போரில் தோல்வியடைந்துகொண்டு வருகிறார்கள் என்பதும் காரணமாக இருக்கலாமல்லவா?

இளவரசர்: போரின் போக்கு ஒரு புது சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறது என்பது உண்மைதான், ஆனால் எனக்கு என்ன புரியவில்லை என்றால்,,,

எதரர் : உங்களுக்கு எல்லாம் நன்றாகவே புரிந்திருக்கிறது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும், இல்லீரி நாட்டைக் காப்பாற்ற விரும்புகிறீர்கள், அதில் சந்தேகமில்லை, ஆனால் இதில் உள்ள சமூக ஏற்றத்தாழ்வுகள், வர்க்கச் சலுகைகள் ஆகியவற்றில் சிறிதும் மாற்றமில்லாமல் இப்போது எப்படி இருக்கின்றதோ, அதே நிலையில் காப்பாற்ற விரும்புகிறீர்கள்.



ஜெர்மானியர்களுக்கு வெற்றி கிட்டும்போல் இருந்தபோது, உங்கள் தந்தை அவர்கள் பக்கம் சேர்ந்துகொண்டார். இன்று நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுவிட்டபின், ருஷ்யர்களுடன் ஒத்துப்போக விரும்புகிறார். ஆனால் இது அவ்வளவு எளிதன்று.

கார்ஸ்கி : ஜெர்மானியரை எதிர்த்துப் போராடியபோதுதான் எங்களில் எத்தனையோ பேர் உயிரிழந்துவிட்டார்கள். ஆகையால் எங்கள் சலுகைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் நாங்கள் எதிரிகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்கிறோம் என்று நீங்கள் சொல்ல முடியாது.

எதரர் : எனக்குத் தெரியும், கார்ஸ்கி. உங்கள் பெண்டகான் ஜெர்மனிக்கு எதிராகத்தான் இருந்தது. அப்போது உங்களுக்கு மிகவும் சாதகமான சூழ்நிலை! நம் நாட்டை ஆக்கிரமிக்காமல் இருப்பதற்காக மன்னர் கப்பம் கட்டிக் கொண்டிருந்தார். நீங்கள் ருஷ்யாவுக்கு எதிராக இருந்தீர்கள். காரணம், ருஷ்யர்கள் வெகு தொலைவில் இருந்தார்கள் என்பது. 'தனி இல்லீரிய நாடு, சுதந்திரமான இல்லீரிய நாடு' அதுவே உங்கள் கோஷமாக இருந்தது என்பதை நான் அறிவேன். தேசிய புர்ழுவாக்களிடம் இரண்டு வருடம் இதே பல்லவியைத்தான் பாடிக்கொண்டிருந்தீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் இன்று ருஷ்யர்கள் நெருங்கி வந்துகொண்டிருக்கிறார்கள், இன்னும் ஓராண்டுக்குள் இங்கேயே வந்து விடுவார்கள், அப்புறம் "தனி இல்லீரிய நாடு" ஏது? அப்போது சொல்லிக் கொள்வதற்கு ஏதாவது வேண்டாமா? "பெண்டகான் உங்களுக்காகவே வேலை செய்தது, மன்னர் தாம் இரட்டைவேட நாடகமாடினார்" என்று சொல்லிக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று பார்க்கிறீர்கள். ஆனால் அவர்கள் உங்களை நம்பவேண்டும் என்ற கட்டாயமில்லை. அப்போது என்ன செய்வார்கள்? ம்... என்ன செய்வார்கள் என்று சொல்லுங்கள்? நாமோ அவர்கள் மீது போர் தொடுத்திருக்கிறோம்.



இளவரசர்: எனதருமை எதரர் அவர்களே, நாம் மனப்பூர்வமாக அவர்களுக்கு ஆதரவளித்தோம் என்று ருஷ்யா தெரிந்து கொள்ளும்போது...

எதரர் : தன் வெற்றிக்கு உதவுவதற்கு என்றே ஒரு ஃபாஸிஸ்ட் சர்வாதிகாரியும் ஒரு மாறுதல் விரும்பாத கட்சியும் மனமுவந்து பறந்தோடி வந்தார்கள் என்பதை அறியும்போது, அவர்கள்பால் மிக்க நன்றியுடையதாயிருக்குமா என்பது ஒரு கேள்விக்குறிதான், (சற்று நேரத்துக்கு பின்) ஒரேஒரு கட்சிதான் ருஷ்யாவின் நம்பிக்கைக்கு உரியதாய்த் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது; ஒரேஒரு கட்சிதான் போர்க்காலம் முழுவதிலும் அவர்களுடன் இடைவிடாத தொடர்பு கொண்டிருந்தது; ஒரேஒரு கட்சிதான் எல்லைக் கோடுகளைத் தாண்டி அவர்களிடம் தூதுவர்களை அனுப்ப முடியும்; அதுதான் எங்கள் கட்சி. உங்கள் சிறிய கூட்டணிக்கு எங்கள் கட்சிதான் உத்தரவாதமாக நிற்க இயலும். ருஷ்யர்கள் இங்கே வந்த பிறகு அவர்கள் பார்வை எங்கள் கண்ணோட்டத்தின் வழியாகவே இருக்கும். (சற்று நேரத்திற்குப் பின்) ஆமாம். நாங்கள் விரும்பும் பாதையில் தான் செல்ல வேண்டும்,

கார்ஸ்கி : நான் இங்கு வரச் சம்மதித்திருக்கக் கூடாது.

இளவரசர்: கார்ஸ்கி!

கார்ஸ்கி : எங்கள் நாணயமான யோசனைகளுக்குக் கேவலமான பிளாக் மெயிலையே பதிலாக முன்வைப்பீர்கள் என்று நான் எதிர்பார்த்திருக்க வேண்டும்.

எதரர் : அலறுங்கள், அது என்னைப் பாதிக்காது. கழுத்து நெறித்துக் கொலை செய்யப்படும் பன்றியைப்போல் அலறுங்கள். ஆனால் ஒன்றைமட்டும் நன்றாக நினைவில் கொள்ளுங்கள். ருஷ்யப்படைகள் இங்கே வந்த பிறகு எங்கள் கட்சியும், நீங்களும் சேர்ந்து அதிகாரத்தில் அமரலாம்—இப்போது நாம் இணைந்து செயல்பட்டால். ஆனால்



இப்போது நம்மிடையே ஓர் உடன்பாடு ஏற்படவில்லை என்றால், எங்கள் கட்சி தனியாகவே ஆட்சியமைக்கும், இதுதான் நிலைமை. ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

கார்ஸ்கி : நான்...

இளவரசர்: (கார்ஸ்கியிடம்) ஆத்திரப்படுவதில் பயன் ஒன்றுமில்லை. நிலைமையை உள்ளது உள்ளபடி உணர்ந்துகொள்ள வேண்டும்.

கார்ஸ்கி: (இளவரசரிடம்) நீங்கள் ஒரு கோழை, உங்கள் தலை தப்புவதற்காக என்னைக் கொண்டுவந்து ஒரு பொறியிலே சிக்கவைத்துவிட்டீர்கள்!

எதரர் : பொறியாவது வலையாவது? உங்களுக்கு விருப்பமில்லை என்றால் நீங்கள் போகலாம். இளவரசருடன் நான் ஓர் உடன்பாட்டிற்கு வருவதற்கு நீங்கள் எந்தவகையிலும் தேவையில்லை.

கார்ஸ்கி : (இளவரசரிடம்) நீங்கள் ஒத்துக்கொள்ளமாட்டீர்கள் என்று...

இளவரசர்: ஏன் கூடாது? உங்களுக்கு விருப்பம் இல்லாவிட்டால், இந்தக் கூட்டணியில் நீங்கள் சேரவேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தப் போவதில்லை. ஆனால் உங்கள் முடிவை ஒட்டித்தான் என் முடிவு இருக்கவேண்டும் என்கிற அவசியமில்லை.

எதரர் : ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம், போரின் கடைசிச் சிலமாதங்களில் எங்கள் கட்சியும் இளவரசரின் நிர்வாகமும் சேர்ந்த கூட்டணி உங்கள் பெண்டகானுக்கு மிகுந்த நெருக்கடியான சூழ்நிலையை உருவாக்கும். ஜெர்மானியரின் தோல்விக்குப் பிறகு உங்களை வேரோடு களைந்தெறிந்து விடுவோம் என்பதனைச் சொல்லத் தேவையில்லை, நீங்கள் தான் தூய்மையாக இருக்க விரும்புவதால்,,,

கார்ஸ்கி: நமது நாட்டின் சுதந்திரத்திற்காக நாங்கள் மூன்றாண்டுகள் போராடியிருக்கிறோம். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் எங்கள் கொள்கைகளுக்காக உயிர்த்தியாகம் செய்திருக்

கின்றனர். உலகத்தின் மதிப்பையும் பெற்றிருக்கிறோம். இத்தனையும், ஜெர்மனி ஆதரவுக்கட்சியும், ருஷ்ய ஆதரவுக் கட்சியும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு திடீரென்று ஒருநாள் எங்களை ஏதோ ஒரு காட்டின் நடுவே வைத்து ஒழித்துக்கட்டுவதற்காகத்தானா?

எதரர் : உணர்ச்சிவசப்பட்டுப் பயனில்லை, கார்ஸ்கி! நீங்கள் தோற்க வேண்டியவர்கள் – தோற்றீர்கள். "இல்லீரிய நாடு, தனித்த சுதந்திர இல்லீரிய நாடு" என்கிற வெற்றுக்கோஷம், வலுவான நாடுகளால் நாற்புறமும் சூழப்பட்ட ஒரு சிறுநாட்டைக் காப்பாற்ற இயலாது. (சிறுமௌனத்திற்குப் பின்) என் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறீர்களா, இல்லையா?

கார்ஸ்கி: ஒத்துக்கொள்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை. மற்றவர்களைக் கேட்காமல் நான் தனியாக முடிவெடுக்க முடியாது.

எதரர் : காத்திருக்க எனக்கு நேரமில்லை, கார்ஸ்கி!

இளவரசர்: அன்புக்குரிய எதரர் அவர்களே! அவருக்கு யோசிக்கச் சிறிது அவகாசம் கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. போர் இன்னும் முடியவில்லை. இன்னும் எட்டே நாள்கள் பாக்கி என்கிற நிலைக்கு இன்னும் வர வில்லை.

எதரர் : எட்டே நாள்கள் பாக்கி என்னும் அவசரம் எனக்கு இருக்கிறது. கார்ஸ்கி, நான் உங்களை நம்புகிறேன். நான் எப்போதும் மற்றவர்கள் மேல் நம்பிக்கை வைப்பவன். அது என் கொள்கை. உங்கள் நண்பர்களை நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும் என்பதை உணர்கிறேன். ஆனால் அவர்களை ஒத்துக்கொள்ளச் செய்ய உங்களால் முடியும் என்பதும் எனக்குத் தெரியும், கொள்கையளவில் உங்கள் சம்மதத்தை இப்போது கொடுத்தீர்களானால், நான் நாளை என் கட்சித் தோழர்களிடம் பேசுவேன்.

உய்கோ : (திடீரென்று எழுந்து) எதரர்!



எதரர் : என்ன?

உய்கோ : நீங்கள் எப்படித் துணிந்து...

எதரர் : வாயை மூடு...

உய்கோ : உங்களுக்கு உரிமை கிடையாது.

எதரர் : வாயை மூடப்போகிறாயா, இல்லையா?

உய்கோ : உங்கள் இருவருக்கும் சொல்கிறேன், கவனமாகக் கேட்டுக்கொள்ளுங்கள், இவர் சொல்வதை இந்தக் கூட்டணி விஷயத்தில் இவர்கட்சி ஒத்துக்கொள்ளாது. உங்களைத் தூயவர்களாக ஆக்கிக்கொள்ள இவரை நம்பாதீர்கள். இவர் சொல்வதை கட்சி ஏற்கப் போவதில்லை.

எதரர் : (வந்த இருவரையும் அமைதிப்படுத்தி) இதைப் பொருட்படுத்த வேண்டாம். உணர்ச்சிவசப்பட்ட அவரது சொந்த வெளிப்பாடு இது, அவ்வளவுதான்.

இளவரசர்: இருக்கலாம். ஆனால் இவர் போடும் கூச்சல் இடையூறாக இருக்கிறது. உங்கள் மெய்க்காவலர்களை அழைத்து இவரை வெளியேற்ற முடியாதா?

எதரர் : தேவையில்லை, இதோ இவர் தானாகவே வெளியேறி விடுவார் பாருங்கள்,

(எழுந்து உய்கோவை நோக்கி வருகிறான்)

உய்கோ : (பின் வாங்கியபடி) என்னைத் தொடாதே. (துப்பாக்கி இருக்கும் தன் பைக்குள் கையை விடுகிறான்) நான் சொல்வதைக் கேள், கேட்கமாட்டாயா?

(அப்போது ஒரு பெருவெடிச்சத்தம் கேட்கிறது. ஜன்னல் கண்ணாடிகள் சிதறுகின்றன. கதவுச்சட்டங்கள் உடைத்துக் கொண்டு பறக்கின்றன)

எதரர் : தரையில் குப்புற விழுங்கள்!

(உய்கோவின் தோள்களைப் பிடித்துத் தரையில் வீழ்த்துகிறான்.
மற்ற இருவரும் அவ்வாறே தரையில் குப்புறப் படுக்கிறார்கள்)



## காட்சி – 5

(முந்தின காட்சியில் உள்ளவர்கள், பிறகு லெயோ, ஸ்லிக், ஜார்ஜ் மூவரும் ஓடி வருகிறார்கள்; சற்று நேரத்துக்குப்பின் ழெசிகா வருகிறாள்)

ஸ்லிக் : காயம் பட்டிருக்கிறதா?

எதரர் : (எழுந்துகொண்டே) இல்லை, யாருக்கும் காயமில்லையே? அப்போது எழுந்திருக்கும் கார்ஸ்கியைப் பார்த்து) இரத்தம் வழிகிறதே?

கார்ஸ்கி: ஒன்றுமில்லை, கண்ணாடிச் சில்லுகள் சிராய்ப்பு,

ஜார்ஜ் : குண்டுவீச்சா?

எதரர் : கைக்குண்டு அல்லது வெடியாக இருக்கவேண்டும், மிக அருகிலிருந்து வெடிக்கப்பட்டிருக்கிறது. தோட்டத்தில் சோதனைபோடுங்கள்.

உய்கோ : (ஜன்னல்புறம் பார்த்துத் தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறான்) பேமானிப் பசங்க! பேமானிப்பசங்க!

(லெயோனும் ஜார்ஜும் ஜன்னல்வழியாக வெளியே குதிக்கிறார்கள்)

எதரர் : (இளவரசரிடம்) இதுபோன்று ஏதாவது நடக்கும் என்று நான் எதிர்பார்த்ததுதான். ஆனால் அவர்கள் இந்தச் சமயத்தை தேர்ந்தெடுத்ததுதான் வருந்தத்தக்கது.

இளவரசர்: ஹும்... என் தந்தையின் அரண்மனை ஞாபகம் வருகிறது. கார்ஸ்கி, இது உங்கள் ஆட்கள் வேலையா?

கார்ஸ்கி : உங்களுக்கு என்ன பைத்தியமா?

எதரர் : அவர்கள் குறிவைத்தது என்னைத்தான். இது நான் மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயம். (கார்ஸ்கியிடம்) ஆரம்பத்தில் கேட்டீர்களே, இப்போது புரிகிறதா? முன் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. (அவரை நோக்கி) இரத்தம் மிகவும் கொட்டுகிறதே,

(ழெசிகா மேல்மூச்சு வாங்க ஓடி வருகிறாள்)



ழெசிகா : எதரர் கொல்லப்பட்டாரா?

எதரர் : உன் கணவனுக்கு ஒன்றும் ஆகவில்லை. (கார்ஸ்கியிடம்) லெயோ உங்களை என் அறைக்கு அழைத்துச் சென்று கட்டுப்போட்டுவிடுவார், அதன் பின் மேலே நம் பேச்சைத் தொடர்வோம்,

ஸ்லிக் : நீங்கள் அனைவருமே மாடிக்குப் போவதுதான் நல்லது, காரணம், அவர்கள் மீண்டும் தாக்கலாம். லெயோ கட்டுப் போட்டுக்கொண்டிருக்கும்போதே நீங்கள் பேசலாம்.

எதரர் : சரி, அப்படியே ஆகட்டும்.

(ஜார்ஜும் லெயோனும் ஜன்னல் வழியே திரும்பி வருகிறார்கள்.)

எதரர் : என்ன விஷயம்?

ஜார்ஜ் : கைக்குண்டுதான்! தோட்டத்திலிருந்து வீசி எறிந்து விட்டு ஓடிப்போய்விட்டார்கள். எல்லாவற்றையும் சுவர் தாங்கியிருக்கிறது.

உய்கோ : பேமானிப் பசங்க!

எதரர் : உள்ளே போவோம். (கதவை நோக்கிச் செல்கின்றனர். உய்கோ அவர்களைப் பின்தொடர்ந்து செல்ல முயல்கிறான்) நீ வேண்டாம்.

(எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்க்கிறார்கள். பின் எதரர் திரும்பிப் பார்த்துவிட்டு வெளியேறுகிறார்)

## காட்சி – 6

உய்கோ, ழெசிகா, ஜார்ஜ், ஸ்லிக்

உய்கோ : (பல்லைக் கடித்துக்கொண்டு) பேமானிப் பசங்க!

ஸ்லிக் : என்னது?

உய்கோ : இந்தக் கைக்குண்டை எறிந்தவர்களைச் சொல்கிறேன் – பேமானிப்பசங்க! (குடிக்க மது ஊற்றிக் கொள்கிறான்)

ஸ்லிக் : கொஞ்சம் பயந்துவிட்டாய் ! அப்படித்தானே?

உய்கோ : எனக்குப் பயம் ஒன்றுமில்லை. கோபம்தான் வருகிறது. (மேலும் குடிக்கிறான்)

ழெசிகா : யார்மேலே.... டியர்!

உய்கோ : குண்டு எறிந்த பேமனிப்பசங்க மேலே.

ஸ்லிக் : உன்னிடம் நல்ல குணம் இன்னும் கொஞ்சம் மிச்சமிருக்கிறது! எங்களுக்கு எல்லாம் இதிலே கோபம் வந்து அதிக நாள் ஆயிற்று.

ஜார்ஜ் : இதிலேதானே எங்களுக்கு பிழைப்பே இருக்கிறது. அவர்கள் இல்லையென்றால் எங்களுக்கு இங்கு என்ன வேலை?

உய்கோ : பார்த்துக்கொள். எல்லோரும் அமைதியாக இருக்கிறார்கள். எல்லோரும் நன்றாகவே இருக்கிறார்கள். அவர் கன்னத்தில் ஒரே ரத்தமாய்க் கொட்டியது–“இது ஒன்றுமில்லை” என்று சிரித்தபடி சொல்லிக்கொண்டே கன்னத்தைக் துடைத்துக் கொண்டார். இவர்களுக்கு நல்ல துணிச்சல். இதே பூமியில் பிறந்த மிகச்சிறந்த மனிதர்கள்! அவர்களுக்கு நல்ல தைரியம். உன்னால் இவர்களை முழுவதிலுமாக வெறுக்க முடியாத அளவிற்கு.... (சோகத்துடன்) இதுவே பெரிய இடையூறு (மேலும் குடிக்கிறான்) நல்ல குணங்களும் தீய குணங்களும் பகிர்ந்தளிக்கப்பட்ட விதம் சரியில்லை!

ழெசிகா : நீங்கள் ஒன்றும் கோழையில்லை, அன்பே!

உய்கோ : நான் கோழையில்லை; ஆனால் தைரியசாலியும் இல்லை. அதிக உணர்ச்சிகள். எனக்கு உறங்க வேண்டும் போல் இருக்கிறது.

ழெசிகா : உய்கோ!

உய்கோ : என்னது?

ழெசிகா : இனிமேல் குடிக்காதீர்கள்.

உய்கோ : ஏன்? நான் செய்வதற்கு ஒன்றுமில்லை. என்னைப் பணிநீக்கம் செய்து விட்டார்கள்.



ழெசிகா : எதரர் உங்களைப் பணிநீக்கம் செய்துவிட்டாரா?

உய்கோ : எதரரா? எதரரைப் பற்றி யார் சொன்னது? நீ எதரரைப்பற்றி என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள். ஆனால் என்னைப் பொறுத்தவரை, எதரர் என்னிடம் நம்பிக்கை வைத்துள்ளார். மற்றவர்களைப் பற்றி அப்படிச் சொல்ல முடியாது. (மேலும் குடிக்கிறான், ஸ்லிக்கிடம் செல்கிறான்) சிலர் நம்பிக்கை வைத்து உன்னிடம் ஒரு பணியை ஒப்படைப்பார். அதை நிறைவேற்றுவதற்காக நீ பெருமுயற்சி செய்து வெற்றியடையும் நிலையில் இருக்கும்போது, அவர்கள் உன்னை ஒதுக்கி எறிந்துவிட்டு, வேறு ஆட்களைக் கொண்டு அதே வேலையை முடிக்கச் செய்வார்கள்.

ழெசிகா : நிறுத்துங்கள்!

உய்கோ : யாருக்கும் என்மேல் நம்பிக்கையில்லை. என் பேச்சில் ஏதோ கோளாறு இருக்கவேண்டும், என்னைக் காதலிக்கிறேன் என்று சொல், பார்க்கலாம்.

ழெசிகா : இவர்கள் முன்னிலையில் சொல்லமாட்டேன்.

ஸ்லிக் : நாங்கள் இருப்பதைப்பற்றி எந்தத் தயக்கமும் வேண்டாம்.

உய்கோ : இவளுக்கு என்மேல் ஆசை கிடையாது. இவளுக்குக் காதல் என்றாலே என்னவென்று தெரியாது. இவள் ஒரு தேவதை – உப்பால் ஆன சிலை!

ஸ்லிக் : உப்புச் சிலையா?

உய்கோ : இல்லை. பனிக்கட்டிச் சிலை! தொட்டுத் தழுவினால் கரைந்துவிடும்!

ஜார்ஜ் : நிஜந்தான்,

ழெசிகா : உய்கோ, வாருங்கள் போகலாம்,

உய்கோ : சற்றுப் பொறு. இதோ ஸ்லிக்குக்கு ஒரு புத்திமதி சொல்லிவிட்டு வருகிறேன். எனக்கு ஸ்லிக்கை மிகவும் பிடிக்கும். அதற்குக் காரணம், அவன் மிகவும் பலசாலி; யோசனை செய்யமாட்டான், ஸ்லிக், உனக்கு ஒரு புத்திமதி சொல்லட்டுமா?



ஸ்லிக் : நான் வேண்டாம் என்று சொன்னால் விடப்போகிறாயா?

உய்கோ : (குடிபோதை ஏறிக்கொண்டிருக்கும் நிலையில்) இரு. சொல்வதைக் கேள். உன்னால் செய்ய முடியாததை ஏற்றுக்கொள்ளக்கூடாது. பிறகு அதுவே பெரிய சுமையாகப் போய்விடும், எல்லாமே பெரிய சுமைதான், நம்பிக்கையுடன் தரப்பட்ட இரகசியப்பணி! நம்பிக்கை எங்கே போச்சு?

ஜார்ஜ் : என்ன இரகசியப்பணி?

உய்கோ : என்னைப் பேசவைக்கவேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள், என்னிடம் அதெல்லாம் ஒன்றும் பலிக்காது, நான் கருங்கல் மாதிரி. (தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்கிறான்) துளைக்க முடியாது – வாயிலிருந்து ஒன்றும் வராது – கப்சிப் – மிகவும் கெட்டி – மற்றவர்கள் மாதிரி ஓட்டைவாயில்லை – ஆமாம் – பார்த்தாலே தெரியுமே!

ஜார்ஜ் : என்னது?

உய்கோ : நான் ஒரு அந்தரங்கமான பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்,

ஜார்ஜ் : ஸ்லிக்!

ஸ்லிக் : ம்...?

ழெசிகா : (சமாதானமாக) நீங்கள் வீணாக மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள். நான் தாயாகப்போவதை இப்படிச் சொல்கிறார். தந்தையின் ‘களை’ தமக்கு இருக்கிறதா என்று கண்ணாடியில் பார்த்துக்கொள்கிறார்!

உய்கோ : பிரமாதம்! தகப்பனார்! அதுதான்! அதேதான்! ஒரு தந்தை எப்படி இருப்பார் என்பதை அவர் அங்க அடையாளங்கள் காட்ட வேண்டும். முகத்தில் ஒருதனிக் “களை”, வாயில் ஒரு சுவை; நெஞ்சில் ஒரு முள்; (மேலும் குடிக்கிறான்) எதரர் விஷயத்தில் கொஞ்சம் வருத்தமாகத்தான் இருக்கிறது. காரணம், நான்தான் சொல்கிறேனே: அவர் எனக்குக் கொஞ்சம் உதவியிருக்கலாம். (சிரிக்கிறான்) ஆமாம்.



மாடியிலே அவர்கள் இன்னும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கார்ஸ்க்கியின் காயத்தை லெயோ சுத்தம்செய்து கட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறான், நீங்கள் என்ன வெறும் மரக் கட்டைகளா? என்னைச் சுடுங்கள்.

ஸ்லிக் : (ழெசிகாவிடம்) இவனைப் போன்ற பசங்கள் குடிக்கக் கூடாது.

உய்கோ : என்னைச் சுடுங்கள் என்றுதான் சொல்கிறேனே! அதுதான் உங்கள் தொழில். நான் ஒன்று சொல்லட்டுமா? ஒரு கொலைகாரன் ஒருநாளும் ஒரு நிஜமான கொலைகாரன் இல்லை. அப்படி நடிக்கிறார்கள். அவ்வளவுதான். நான் சொல்வது புரிகிறதா? ஆனால் செத்துப்போனவன் நிஜமாகவே செத்துப்போனவன்தான், இருப்பதா? இறப்பதா? என்ன சொல்கிறீர்கள்? பூமிக்கு அடியில் ஆறடி ஆழத்தில் புதைக்கப்பட்ட ஒரு பிணம் நான், அதைத் தவிர வேறு எதுவாகவும் என்னால் இருக்க இயலாது.

ழெசிகா : வீட்டுக்குப் போகலாமா?

உய்கோ : கொஞ்சம் இரு... ம்...

ழெசிகா : (கிளாஸில் மதுவை நிரப்பிக்கொண்டே) ஒகோ! அப்போது இன்னும் கொஞ்சம் குடியுங்கள்,

உய்கோ : சரி.... (குடிக்கிறான்)

ஸ்லிக் : அவனுக்கு மேலும்மேலும் ஊற்றிக் குடிக்கக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறாயே!

ழெசிகா : இந்நிலை ஒருமுடிவுக்கு வரவேண்டுமல்லவா? அதற்காகத் தான். இனிமேல் காத்திருக்க வேண்டியதுதான்.

உய்கோ : கிளாஸைக் குடித்துக் காலிசெய்கிறான். ழெசிகா அதை மீண்டும் நிரப்புகிறாள்,

உய்கோ : (முழு போதையில்) நான் என்ன சொல்லிக்கொண்டிருந்தேன். கொலைகாரனைப் பற்றிச் சொன்னேன் இல்லையா? உண்மை என்ன வென்றால், இங்கு (நெற்றியில் தட்டிக் காட்டி) ஏதோ

தொணதொணவென்று பேச்சு கேட்டுக்கொண்டே இருக்கிறது; சற்று ஓய்ந்து நிசப்தமாக இருந்தால் தேவலை என்று எனக்குத் தோன்றுகிறது. (ஸ்லிக்கிடம்) சிரிக்காதே. நான் குடி போதையில் இருக்கிறேன் என்று எனக்குத் தெரியும், எனக்கு என்னையே பிடிக்கவில்லை; நான் நானாக இருக்க விரும்பவில்லை என்ன, ஒரே விஷயம் திரியைப்பற்ற வைக்க வேண்டும். அதுதான் மனச்சாட்சியின் நேரம். (சிரிக்கிறான்) ஏன் திரும்புகிறீர்கள்? தெய்வமே! திரும்பாதீர்கள். இல்லாவிட்டால் நானும் திரும்பி விடுவேன். (இருந்த இடத்திலிருந்து திரும்ப எத்தனித்து ஒரு நாற்காலியில் விழுகிறான்)

(அவன் தலை துவள்கிறது. ழெசிகா அவனை நெருங்கிக் கூர்ந்து நோக்குகிறாள்)

ழெசிகா : அவ்வளவுதான்! முடிந்துவிட்டது, கொஞ்சம் ஒருகை பிடியுங்கள், இவரைத் தூக்கிக்கொண்டுபோய்க் கட்டிலில் போட்டுவிடலாம்.

ஸ்லிக் : (அவளைப் பார்த்துத் தலையைச் சொறிந்துகொள்கிறான்) உன் கணவன் மிக அதிகம் பேசுகிறான்.

ழெசிகா: (சிரித்துக்கொண்டே) இவரைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. இவர் சொல்வது எதற்கும் அர்த்தமே கிடையாது.

(ஸ்லிக், ஜார்ஜ் இருவரும் அவனைக் கைகால்களைப் பிடித்துத் தூக்கிச் செல்கின்றனர்.

(திரை)



## அரங்கமைப்பு ஐந்து

வீட்டின் உட்புறம்: உய்கோ முழு உடையுடன் கட்டிலில் கிடக்கிறான் – மேலே ஒரு போர்வை – உறங்கிக்கொண்டு இருக்கிறான். தூக்கத்தில் விசித்துப் புரண்டு படுக்கிறான். ழெசிகா அவன் தலைமாட்டில் அசையாமல் அமர்ந்திருக்கிறாள். அவன் தொடர்ந்து விம்முகிறான். அவள் எழுந்து குளியலறைக்குச் செல்கிறாள். தண்ணீர் கொட்டும் சத்தம் கேட்கிறது. ஜன்னல் திரைச்சீலைக்குப்பின்னே ஒளிந்து கொண்டிருக்கிறது ஓர் உருவம் அதுதான் ஒல்கா! திரையை விலக்கி எட்டிப் பார்க்கிறாள். ஒரு முடிவுக்கு வந்தவளாய் உய்கோவின் அருகில் வந்து அவனையே பார்க்கிறாள். உய்கோ விம்முகிறான். ஒல்கா அவன் தலையணையைச் சரிசெய்து தலையை நிமிர்த்தி வைக்கிறாள். இச்சமயம் ழெசிகா குளியலறையிலிருந்து வெளியே வந்து சுற்றும் முற்றும் பார்க்கிறாள், ழெசிகா கையில் ஈர ஒத்தடம் இருக்கிறது.

### காட்சி – 1

உய்கோ, ழெசிகா, ஒல்கா,

ழெசிகா : அடாடா! எவ்வளவு அக்கறை ! மேடம், வணக்கம்,

ஒல்கா : நான்தான் ஒல்கா லொராம்.

ழெசிகா : நினைத்தேன்.

ஒல்கா : இவருக்குக் காயம்பட்டிருக்கிறதா?

ழெசிகா : இல்லை, குடிமயக்கத்தில் இருக்கிறார். (ஒல்காவைத் தாண்டிவந்து) உங்களுக்கு ஆட்சேபனை இல்லாவிட்டால் இதைச் செய்ய விடுங்கள், (உய்கோவின் நெற்றியில் ஈர ஒத்தடத்தை வைக்கிறாள்).

ஒல்கா : அப்படி வைக்கக்கூடாது. (ஒத்தடத்தைச் சரி செய்கிறாள்)

ழெசிகா : என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்.

ஒல்கா : எதரர் என்ன ஆனார்?

ழெசிகா : எதரரா? தயவுசெய்து அமர்ந்துகொள்ளுங்கள். (ஒல்கா அமர்ந்து கொள்கிறாள்) நீங்கள்தான் அந்த குண்டை வீசியதா?